
பகுப்பும் தொகுப்பும்
முனைவர் சு இராமலிங்கம்

108

செந்தமிழறிஞர்கள்

ISBN : 978-81-686742-8-8






சுத்தானந்த பாரதியார்

NSR 100 Educational Trust
[An ISO 9001 - 2015 Certified]
AD-13,5th Street, Anna Nagar West, Chennai - 600 040
www.nasubbureddiar100.in

செந்தமிழ்சிற்பிகள்

சுத்தானந்த பாரதியார் (1897-1990)



அறிமுகம்

சுத்தானந்த பாரதியார் (மே 11, 1897 - மார்ச் 7, 1990) கவியோகி, மகரிஷி என்று போற்றப்பட்டவர் ஆவார். இவர் கவிதைகள், தமிழிசைப் பாடல்கள், உரைநடை நூல்கள், மேடை நாடகங்கள் எனப் பல நூல்களை இயற்றியவராவார்.

சுத்தானந்த பாரதியார் எனப் பின்னாளில் அழைக்கப்பட்ட வேங்கட சுப்பிரமணியன் பனையூரைச் சொந்த ஊராகக்கொண்ட சிவிகுல ஜடாதரய்யர் காமாட்சி அம்மையார் இணையரின் நான்காவது குழந்தையாக 1897 மே 11-இல் தமிழ்நாடு சிவகங்கையில் பிறந்தார். ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்தபோது தான் 'பாரத சக்தி' எனும் மகா காவியத்தைப் பாடத் தொடங்கினார். இவர் இயற்றிய நூல்களில் யோகசித்தி, கீர்த்தனாஞ்சலி, மேளராகமாலை ஆகிய கவிதை நூல்கள் பிரபலமானவை. தமிழின் வரலாற்றில் சிறப்பாகத் தொண்டாற்றிய இவர், தமது தொண்ணூற்று இரண்டாம் அகவையில் காலமானார்.

திருக்குறளை அதே ஈரடிகளில், அதே நடை, சந்தத்தில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் சுத்தானந்த பாரதியார், 1968-ஆம் ஆண்டு சென்னையில் நடந்த இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டில், அப்புத்தகம் திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த பதிப்பு கழகத்தாரால் வெளியிடப்பட்டது.

1984 தமிழக அரசும், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகமும் நிறுவிய முதல் ராஜராஜன் விருதைப் (மாமன்னன் இராசராசன் படைப்பிலக்கியப் பெரும் பரிசு) பெற்றார் கவியோகி சுத்தானந்த பாரதி. அவர் எழுதிய ஆயிரக்கணக்கான நூல்களில், "பாரத சக்தி மகாகாவியம்" அவர், சுதந்திரம் கிடைக்கும் வரை பாண்டிச்சேரி அரவிந்தர் ஆசிரமத்தில் ஏறத்தாழ 20 ஆண்டுகள் மவுன விரதம் காத்தபோது மனதில் தோன்றிய காவியம் ஆகும்.

சோவியத் கீதாஞ்சலி என்னும் நூல் சோவியத் ஒன்றியத்தின் சோவியத் நாடு நேரு நினைவுப் பரிசு பெற்றது.

எழுதிய நூல்கS;

ஸ்ரீ அரவிந்த யோக தீபிகை

பேரின்பம்

ஞானி எமர்ஸன்

நாவலர் பெருமான்

உடலுறுதி

விஞ்ஞான மணிகள்

பாரத சக்தி மகா காவியம்

யோக சித்தி

அருட்செல்வம்

கவிக் கனவுகள்

கீர்த்தனாஞ்சலி

நவரஸ நடனாஞ்சலி

பாரத கீதம்

தமிழ்க் கனல்

ஆத்ம சோதனை

ஏழைபடும் பாடு

இளிச்சவாயன்

அன்னை

இவளும் அவளும்

நாகரிகப் பண்ணை

பகவத் கீதை

இல்லற ஒழுக்கம்

பெரியவாள் கதை

அருட்பெருமான்

சிவானந்த ஜோதி

இதுதான் உலகம்

தயானந்த ஜோதி

பாப்பா பாட்டு

கலிமாவின் காதல்

Sri Aurobindo

Integral Yoga

The Gospel of Perfect Life

Yogi Shuddhananda

பொது நெறி

கல்விக்கதிர்

தியான சாதனம்


நாவலர் பெருமான்

பாட்டாளி பாட்டு

சோதனையும் சாதனையும்

(😊)(😊)(😊) @@@@@@ (😊)(😊)(😊)

ஆன்மீகம்



சுத்தானந்த பாரதியின் மூத்த தாய்மாமாவின் பெயர் ராமசாமி ஐயர். அவருடைய மகளின் கணவர் ஆன்மிகத்தேடல் கொண்டவர். அவரை மனநலமில்லாதவர் என்று துரத்திவிட்டனர். அவர் சுத்தானந்தரையும் தன்னுடன் அழைத்துக்கொண்டு 'இவர்களுக்கு நம் வழி புரியவில்லை, நீயும் என்னுடன் வந்து விடு' என்றார். அதுவே தன் ஆன்மிக நாட்டத்துக்கு தொடக்கம் என சுத்தானந்தர் தன்வரலாற்றில் சொல்கிறார். அவர் தன்னிடம் "ஞானிகளைப் பித்தர் என்று கூறும் இந்த நரகம் உனக்கு வேண்டாம். உலகம் ஒரு துன்பக்காடு, உள்ளுறவுதான் நல்ல உறவு. நீ தனித்திரு, இனித்திரு" என்றதாக சுத்தானந்தர் பதிவு செய்கிறார். மறுபக்கம் சுத்தானந்த பாரதியின் சித்தியின் கணவர் ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர். அவர் தகாத உறவொன்றை வைத்துக் கொண்டு இவரது சித்தியைப் படாத பாடு படுத்தி வந்தார். இந்த இருமுனையில் தான் ஆன்மிகப்பாதையை தெரிவுசெய்ததாக சுத்தானந்த பாரதியார் எழுதுகிறார்.

சுத்தானந்த பாரதி சிறுவயதிலேயே பூரணானந்தர், ஞானசித்தர். ரமணர், அரவிந்தர். மேஷர்மிபாபா, சிவானந்தர் எனப் பல ஆன்மிக யோகிகளைச் சந்தித்து ஆன்மீகத்தாக்கத்தை அடைந்தார். தன் 30-33 வயதுக்கு இடைப்பட்ட காலங்களில் கேதார்நாத், பத்ரிநாத், உத்தரகாசி, கங்கோத்ரி போன்ற இடங்களுக்குத் தொடர்ந்து பயணம் செய்து அங்கே இரண்டு மாதங்கள் தங்கித் தவம் செய்தார். அக்காலங்களில் யோகிகளையும் துறவிகளையும் சந்தித்தார். சிரவண பெலகோலாவிலும் திருவண்ணாமலை ரமணாஸ்ரமத்திலும் சில காலம் தங்கியிருந்தார்.

சுத்தானந்த பாரதி புதுச்சேரி அரவிந்தாஸ்ரமத்தில் பன்னிரண்டு ஆண்டுகள் மவுனவிரதம் பூண்டிருக்கும் போது பிரெஞ்சு உட்பட பல மொழிப் புத்தகங்களைப் படித்தார். வடலூரில் யோகசமாஜம் நிறுவி சிலகாலம் இருந்தபோதும் மொழிபெயர்ப்புகள் செய்திருக்கிறார். சிவகங்கை சோழபுரத்தில் சர்வதேசக் குழந்தை ஆண்டில் (1979) சுத்தானந்த யோக சமாஜம் நிறுவினார். சுத்தானந்த பாரதி அரவிந்தரால் யோகி என்றும் சுவாரி சிவானந்தரால் ரிஷி என்றும் சிருங்கேரி நரசிம்ம பாரதி ஸ்வாமிகளால்

கவியோகி என்றும் அழைக்கப்பட்டார். இந்தப் பெயர்களில் அரவிந்தர் கொடுத்த பெயரே நிலைத்தது.

இலக்கியப் பணிகள்

சுத்தானந்த பாரதி வ.வே.சுப்ரமணிய ஐயரின் சேரன்மாதேவி குருகுலத்தில் ஆசிரியராக பணியாற்றினார். அப்போது அவர்கள் நடத்திவந்த பாலபாரதி இதழில் தொடர்ச்சியாக எழுதினார். சுத்தானந்த பாரதி தமிழில் காப்பியம், கவிதை, நாடகம், நாட்டியம், இசைப்பாடல் வரலாறு, கடித இலக்கியம், வாழ்க்கை வரலாறு, சுயவரலாறு, நாட்டுவரலாறு, புனைகதைகள், பயண இலக்கியம், சிறுகதை, இலக்கிய விமர்சனம், மொழிபெயர்ப்பு, குழந்தை இலக்கியம் ஆன்மிகம், உடல்கூறு ஆய்வு, யோகம் எனப் பல துறைகளில் எழுதியவர். அவர் ஆரம்பகாலத்தில் எழுதிய 'பைந்தமிழ்ச் சோலை' என்ற நூல் தமிழின் தொன்மை, இலக்கிய வளம் பற்றிக் கூறுகிறது. தமிழ் இலக்கியங்கள் பண்டிதர்களுக்காகவே எழுதப்பட்ட காலக்கட்டத்தில் சாதாரண வாசகன் புரிந்து கொள்ளும்படி எழுதியவர் சுத்தானந்த பாரதி.பழைய இலக்கியங்களை கல்வியாளர் அல்லாதவர்களிடம் கொண்டுபோய்ச் சேர்த்தவர்களில் அவரும் ஒருவர்.



சுத்தானந்த பாரதி (பாரத்வாஜ ஆசிரமம்)

நூல்கள்

தெலுங்கில் 2, இந்தியில் 4, பிரெஞ்சு மொழியில் 6, ஆங்கிலத்தில் 38 என 50 நூல்களை எழுதியுள்ளார். சுத்தானந்த பாரதி எழுதி அச்சில் வந்தவை 270 நூல்கள். அச்சில் வராதவை 800 அளவில் உள்ளன. இவை தவிர தமிழகத்தில் முப்பது, நாற்பதுகளில் வெளிவந்த இதழ்களில் அவர் எழுதிய கட்டுரைகளில் பல நூல் வடிவில் வரவில்லை. 1897 முதல் 1990

வரை 93 ஆண்டுகள் வாழ்ந்த இவருடைய பல புத்தகங்கள் இப்போது கிடைப்பதில்லை. நூல்பட்டியல் மட்டுமே கிடைக்கின்றது.

புனைவிலக்கியம்

சுத்தானந்த பாரதி பத்து சிறுகதைத் தொகுதிகளையும், 19 நாவல்களையும் எழுதியுள்ளார். அவருடைய கதைகள் தொடர்ச்சியாக வெவ்வேறு இதழ்களில் வெளிவந்தாலும் முறையாகத் தொகுக்கப்படவில்லை.

மெய்யியல் நூல்கள்

யோகியான சுத்தானந்த பாரதியாரின் குறள்பா வடிவிலான யோகசித்தி என்ற நூல் அவரின் அனுபவத்தின் வெளிப்பாடாக அமைந்தது. அதில் 12 இயல்களும் 405 குறள்பாக்களும் உள்ளன. இதற்கு அவரே உரையும் எழுதியிருக்கிறார். அதே நூலை அவர் 'The Gospel of Project Life' என்னும் தலைப்பில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். அந்த நூல் அவரது 'பாரதசக்தி' காப்பியத்தின் ஒரு பகுதியாகவும் சேர்க்கப்பட்டுள்ளது.

கவிதை

சுத்தானந்த பாரதி பாரதியாருக்குப்பின் உருவான இரு கவிதை மரபுகளில் நாமக்கல் கவிஞர் மரபு எனப்படும் போக்குடன் அடையாளப்படுத்தப்படவேண்டியவர். எளிய மொழி, சந்தம், நேரடியான கூறுமுறை, நாட்டாரியல் பாடல்முறைகளின் செல்வாக்கு கொண்டவை அவருடைய கவிதைகள்

காவியம்

சுத்தானந்த பாரதியின் முதன்மை நூல் அவர் பாரதமாதாவை நாயகியாக்கி எழுதிய 'பாரத மகாசக்தி' காப்பியம். ஐந்து காண்டங்களும் 416 படலங்களும் 50000 பாடல்களும் கொண்டது. 1948-ல் வெளிவந்தது. அதன் மறுபதிப்பு 1969-ல் வந்தது.

பயணநூல்கள்

சுத்தானந்த பாரதி சென்று வந்த நாடுகள் ரஷ்யா, இலங்கை, மலாயா (மலேசியா), தாய்லாந்து, ஜப்பான், பிரான்ஸ், இங்கிலாந்து, ஜெர்மனி, அமெரிக்கா, தென்னாப்பிரிக்கா, இத்தாலி ஆகியவை. அவற்றைப் பற்றிய பயணக்கட்டுரைகளை எழுதியிருக்கிறார். 'நான் கண்ட ரஷ்யா', 'நான் கண்ட ஜப்பான்' அவருடைய நூல்களில் புகழ்பெற்றவை.

யோகசமாஜம்

சுத்தானந்த பாரதி தன்னுடைய மெய்யியல் செய்தி உலகமெங்கும் செல்லவேண்டும் என்னும் நோக்குடன் 'யோகசமாஜம்' என்னும் அமைப்பை 1977-ல் சென்னை பள்ளிப்பட்டு ஸ்ரீராம் நகரில் உருவாக்கினார். பின்னர் அது அடையாறுக்கு மாற்றப்பட்டது. 'யோகப்பயிற்சி' என்னும் இதழையும் அங்கிருந்து வெளியிட்டுவந்தார்.


1977-ல் சிவகங்கையில் யோகசமாஜத்தின் கிளையை அமைத்தார். செப்டம்பர் 1, 1979 அன்று சிவகங்கை அருகே சோழபுரம் என்னும் ஊரில் நன்கொடையாகப் பெற்ற தன்னுடைய செல்வத்தைக் கொண்டும், நகரத்தார் உதவியுடனும் 'சுத்தானந்த யோகசமாஜம்' என்னும் அமைப்பை தொடங்கினார். அதனுடன் இணைந்து 'சுத்தானந்த தேசிய வித்யாலயா' என்னும் பள்ளியும் தொடங்கப்பட்டது.ஜூன் 1,1987-ல் அந்நிறுவனம் சொந்தக் கட்டிடங்களுடன் விரிவாக்கம் செய்யப்பட்டது.

1982-ல் சுத்தானந்த பாரதி சென்னையில் இருந்து சோழபுரம் சுத்தானந்த யோகசமாஜத்துக்கு வந்து சேர்ந்தார். பின்னர் நிரந்தரமாக அங்கேயே தங்கியிருந்தார். தன் முதுமையில் மீண்டும் ஒருமுறை ரிஷிகேஷ் செல்ல விரும்பி மாணவர்களுடன் ரிஷிகேஷ் சென்றார். அங்கே சிலரைச் சந்தித்ததாகச் சொல்லப்படுகிறது. பிப்ரவரி,1990-ல் ஊர் திரும்பினார். கிளம்பும்போதே ரிஷிகேஷ் சென்று வந்தபின் உயிர்விடுவேன் என்று கூறித் தன் சமாதிமேல் வைக்கப்படவேண்டிய சிவலிங்கத்தைச் செதுக்க ஏற்பாடு செய்திருந்தார். ரிஷிகேஷ் பயணத்திலேயே உடல்நலம் கெட்டு திரும்பிவந்தார். நோயுற்று சில நாட்கள் மௌனவிரதத்தில் இருந்து பின்னர் மார்ச் மாதம் மறைந்தார்.

வரலாற்று இடம்

சுத்தானந்த பாரதிக்கு தமிழ் வரலாற்றில் யோகி, இலக்கியவாதி , இசைப்பாடலாசிரியர் என்னும் மூன்று தளங்களில் முக்கியமான இடம் உண்டு. தமிழகத்து சித்தர்,யோகியர் முதலிய ஆன்மிகவாதிகளுக்கு நீண்ட வரலாற்றுத் தொடர்ச்சியும், ஞானமரபும் உண்டு. அவர்கள் பொதுவாக அரசியல் முதலிய உலகியல் செயல்பாடுகளில் இருந்து முற்றிலும் விலகியிருப்பதே வழக்கம். மெய்ஞான மரபில் இருந்து நேரடியாக

அரசியல் களத்துக்கு வந்த முதல் ஆளுமை சுத்தானந்தர். சுவாமி சகஜானந்தர் இன்னொரு உதாரணம். காந்திய இயக்கங்களில் தீவிரமாக ஈடுபடும்போதே சுத்தானந்தர் யோகியாகவும், ஆன்மிகப் பிரச்சாரகராகவும் திகழ்ந்தார். இந்தியாவில் பத்தொன்பது -இருபதாம் நூற்றாண்டுகளில் அரசியல்பணியும் ஆன்மிகப்பணியும் ஒன்றாக ஆனமைக்கான உதாரணம் அவர். அரசியல் என்பது ஒரு தொண்டு என்றும் தொண்டு என்பது ஒரு யோகம் என்றும் சுத்தானந்தர் தன் நூல்களில் விளக்குகிறார். இந்த இணைப்பு காந்திய இயக்கத்தின் தத்துவ உள்ளுறையை ஒட்டி நிகழ்ந்தது. காந்தியைப் புரிந்துகொள்ள சுத்தானந்தர் போன்ற யோகிகள் அவர் தலைமையை ஏற்றதைக் கருத்தில் கொண்டாகவேண்டும். காந்தியத்தில் இந்த ஆன்மிக அம்சம் இருந்தது.



சுத்தானந்தர் தேசிய இயக்கத்தைச் சேர்ந்தவர். ஆகவே நேர்ப்பிரச்சாரமாகவே அவர் தன் ஆக்கங்களை எழுதினார். ஆகவே அவற்றில் இலக்கியத்துக்குரிய நுண்மையும் வடிவ ஒருமையும் அமையவில்லை. ஆகவே இலக்கிய விமர்சகர்களால் அவர் இலக்கியப்படைப்பாளியாக கருத்தில் கொள்ளப்படுவதில்லை. சுத்தானந்தர் மொழியாக்கம் செய்த விக்டர் ஹ்யூகோவின்(Victor Hugo) 'ஏழைபடும்பாடு' (Les Miserables) போன்ற நூல்கள் நவீனத் தமிழிலக்கியத்தில் செல்வாக்கு செலுத்தியவை.


சுத்தானந்தர் ஓர் இசைப்பாடலாசிரியராக ஓர் வாழும் படைப்பாளி. அவருடைய இசைப்பாடல்கள் மரபிசை மேடைகளில் இன்றும் ஒலித்துக்கொண்டிருக்கின்றன. இசைகற்றவர் என்பதனாலும், இசைப்பாடல்களில் அவருடைய பிரச்சாரநடையும் மனநிலையும் இல்லாமல் நெகிழ்ச்சியான மனநிலையும் அதற்குரிய மொழியும் அமைந்திருப்பதனாலும் அவை இலக்கியப்படைப்புகளாகவும் முக்கியமானவை.

'புவியெல்லாம் போற்றிய கவியோகி' சுத்தானந்த பாரதியார்!

https://keetru.com/index.php/2018-01-12-05-57-50/2014-03-08-04-39-26/2014-03-14-11-17-85/26377-2014-04-25-06-48-30

பி.தயாளன்

தாய்மொழி வழிக் கல்வியை வலியுறுத்தியவர்! செயல்முறைக் கல்விக்குப் பாடுபட்டவர்! மொழி பெயர்ப்புத் துறையில் முன்னோடியாக விளங்கியவர்! கவிதை, நாடகம், புனைகதை, மகாகாவியம், வரலாறு, இதழியல், கல்வி, அறிவியல், ஆன்மிகம் எனப் பலதுறைகளில் சாதனை படைத்தவர். இவ்வாறு பன்முக ஆற்றல் கொண்டவர்! அவரே கவியோகி சுத்தானந்த பாரதியார்!



கவியோகி சிவகங்கையில் 10.05.1897 ஆம் நாள் ஜடாதர அய்யருக்கும் - காமாட்சி அம்மையாருக்கும் நான்காவது பிள்ளையாகப் பிறந்தார். பெற்றோர் இட்ட பெயர் வேங்கட சுப்பிரமணியன்.

ஆரம்பக் கல்வியைத் திண்ணை பள்ளியிலும், அதன் பிறகு சிவகங்கை அரசர் பள்ளியிலும் படித்தார். ஆசிரியர்களின் பிரம்படிகளுக்குப் பயந்து பள்ளிப் படிப்பை வெறுத்தார்.

தானாகவே கற்றுத் தன்னுடைய கல்வி அறிவை வளர்த்துக் கொண்டார். புலவர் தெய்வ சிகாமணி என்ற ஆசிரியரிடம் தமிழ் கற்று, இலக்கண இலக்கியங்களில் தேர்ச்சி பெற்றார்.

'அரிஸ்டாடில், பிளாட்டோ, ஷேக்ஸ்பியர், மில்டன், ஷெல்லி, வேர்ட்ஸ்வொர்த்' – போன்றோரின் படைப்புகளை இளம் வயதிலேயே கற்றார்.

பசுமலை கிறிஸ்துவர் ஆசிரியர் பயிற்சி மையத்தில் சேர்ந்து படித்து முடித்தார். அரசர் கலாசாலையில் நூலகராகப் பணிபுரிந்தார். அப்போது நூலகத்தில் உள்ள அறிவியல், வரலாற்று நூல்களைப் பெரிதும் விரும்பியும், அயராது படித்தும் அறிவைப் பெருக்கிக் கொண்டார்.

காட்டுப்புத்தூர் ஜமீன்தார் உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியர் பணியில் சேர்ந்தார். ஆங்கிலம், புவியியல், கணிதம் ஆகிய பாடங்களை மாணவர்களுக்கு எளிமையாகவும், இனிமையாகவும் கற்பித்தார்.

மாணவர்களுக்குச் சாரணர் பயிற்சி அளித்தார்; அதன்வழி, தொண்டுள்ளத்தையும், ஒழுக்கத்தையும், மது விலக்கையும், கல்வி, தொழில், சமுதாய ஒற்றுமையையும் கற்பித்தார். நடைப்பள்ளிக்கூடம் நடத்தினார்.

'பாலபாரதி', 'சமரச போதினி', 'சுயராஜ்யா', 'இயற்கை', 'தொழிற்கல்வி' – ஆகிய இதழ்களில் கல்வி குறித்து பல கட்டுரைகள் எழுதினார்.

"அறிவு, பலம், ஒழுக்கம், தொழில், கலை ஆகியவற்றை ஒருங்கே வளர்க்க வேண்டும். மாணவர்கள் சமுதாயத் தொண்டுகளில் ஈடுபட பயிற்சி அளிப்பதும், மாணவர்களின் திறமையை வளர்ப்பதுமே நல்ல கல்வியாகும்".

"அடிப்படைக் கல்வியை இலவசமாக, தாய்மொழியில் அனைவருக்கும் அளிக்க வேண்டும்."

"மின் ஆற்றலை உள்வாங்கிக் கொண்டு மின் விளக்கு பிறருக்கு வெளிச்சத்தை அளிப்பது போல், ஆசிரியர்கள் பல நூல்களிலுள்ள கருத்துக்களை உள்வாங்கிக் கொண்டு மாணவர்களுக்குப் புரியும் வகையில் எடுத்துரைப்பதே 'கற்பித்தல்' என்னும் ஆசிரியப் பணியாகும்".

"புத்தகப் படிப்பு மட்டுமே கல்வியன்று; மூளை, மனம், உள்ளம், உணர்ச்சி, புலன்கள், உழைப்பு ஆகியவற்றின் மூலமாகவும் கல்வி கற்க வேண்டும்." இவ்வாறான உயர்ந்த சிந்தனைகளை கல்வி குறித்து

முன்வைத்தவர் கவியோகி. வரிப்பணத்தில் பாதி நிதியைக் கல்விக்கு ஒதுக்கிட வலியுறுத்தினார்.

இந்தியாவில் அக்காலகட்டத்தில் நடைபெற்றுவந்த சுதந்தரப் போராட்டத்தை வேடிக்கை பார்ப்பவராக இல்லாமல், சுதந்தரப் போரில் நேரடியாக ஈடுபட்டார் கவியோகி. "நாம் கேட்பது பிச்சையன்று –சுதந்தர உரிமை. அடக்குமுறையும், ஒடுக்குமுறையும், தடியடி வஞ்சகச் சூழ்ச்சியும் கொண்ட அதிகார வர்க்கமா நமக்கு விடுதலையைத் தரும்? விடுதலை, போராடிப் பெற வேண்டியது" – என்று முழங்கினார்.

காவல்துறையின் அடக்குமுறைகளையும், தடைகளையும் மீறிப் பொதுக்கூட்டங்களின் மூலம் மக்களுக்குச் சுதந்தர உணர்வை ஊட்டினார்.

வ.வே.சு. ஐயருடன் இணைந்து 'பாலபாரதி'யில் கட்டுரைகளை எழுதினார். கதர்த் துணி மூட்டையைத் தாமே சுமந்து கொண்டு ஊர் ஊராகச் சென்று விற்பனை செய்தார்.

மகாத்மா காந்தியடிகள் கைது செய்யப்பட்ட போது, தனது ஆசிரியப் பணியைத் தூக்கியெறிந்துவிட்டு, தாய் நாட்டிற்கான விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டார்.

"அனைவருக்கும் அரசியல் விடுதலை வேண்டும். அதற்கு மன உறுதியுடன் போராட வேண்டும்"-என்று இளைஞர்களுக்கு அறைகூவல் விடுத்தார். சைமன் குழுவுக்கு எதிரான போராட்டத்திலும், 1920 ஆம் ஆண்டு நடைபெற்ற ஒத்துழையாமை இயக்கத்திலும், கிலாபத் இயக்கங்களிலும் கலந்து கொண்டார்.

தமிழ்த் தென்றல் திரு.வி.க.வுடன் இணைந்து கதர்ப்பணி, மதுவிலக்கு, தீண்டாமை ஒழிப்பு, உயிர்ப்பலி தடுத்தல் போன்ற சமூகச் சீர்திருத்தப் பணிகளிலும் ஈடுபட்டார்.

கவியோகி தெலுங்கு, இந்தி, பிரெஞ்சு, இலத்தீன், ஆங்கிலம் போன்ற மொழிகளைக் கற்றுப் பன்மொழியாளராக விளங்கினார். மேற்கண்ட மொழிகளிலிருந்து சிறந்த இலக்கியங்களை இனிய எளிய அழகு தமிழ் நடையில் மொழி பெயர்த்தார்.

திருக்குறளுக்கு எளிய நடையில், அனைவருக்கும் புரியும் வகையில் உரை எழுதி வெளியிட்டார். மேலும், திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். 'அவரது மொழிபெயர்ப்பு' வள்ளுவர்

உள்ளத்தைக் காட்டும் வண்ணம் உள்ளது- எனத் திறனாய்வாளர்கள் போற்றிப் புகழ்கின்றனர்.

தமிழ் மொழியில் இறைவழிபாடு நடத்துவதற்குத் தற்பொழுது போராட்டம் நடைபெற்று வருகிறது. ஆனால், கவியோகி தொண்ணூறு ஆண்டுகளுக்கு முன்பே, தமிழில் அருச்சனைக்கான பாடல்களை இயற்றி அளித்துள்ளார். தமிழ் மொழியில் வழிபாடு செய்ய வேண்டும் என்பதில் மிகுந்த ஆர்வம் கொண்டு செயல்பட்டார். ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழிசைப் பாடல்கள் இயற்றித் தமிழிசையை வளர்த்தார்.

"ஒரு மனிதன் தன் இரைப்பையினால் மட்டுமே உணவைச் சீரணிக்க முடியும். அதுபோல் தாய் மொழியால் மட்டுமே அறிவைப் பெற முடியும்"- என்று தாய்மொழியின் அவசியத்தை வலியுறுத்தினார் கவியோகி.

சிலப்பதிகாரத்தை உரைநடையில் 'சிலம்புச் செல்வம்' என்ற பெயரில் படைத்தளித்தார். மணிமேகலையை 'மணிமேகலை அமுதம்' என்ற பெயரில் உரைநடையில் எழுதியுள்ளார்.

சீவகசிந்தாமணியை நாடகமாகவும், வளையாபதி, குண்டலகேசி இரண்டையும் முறையே, காவியமாகவும், நாடகமாகவும் எழுதி வழங்கியுள்ளார்.

எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி, இசை, நாடகம், நாட்டியம் ஆகியன குறித்த இலக்கணங்களைக் கற்றறிந்தார். 'பைந்தமிழ்ச் சோலை', 'நாடகக் கலை', 'இராணி மங்கம்மாள்', 'காலத்தேர்' ஆகிய அரிய நூல்களை எழுதியுள்ளார்.

தனித் தமிழ் நாடகங்களைத் தமிழர் தயாரித்து, நடித்துத் தனித் தமிழ்க் கலையை வளர்க்க வேண்டுமெனவும், நாடகத்தின் மூலம் சமூக சீர்திருத்தக் கருத்துக்களை மக்களிடம் பரப்பிட வேண்டுமெனவும் வலியுறுத்தினார். அய்ம்பத்து நான்கு நாடகங்களைத் தமிழில் எழுதியுள்ளார். "கலிமாவின் காதல்", "நாகரிகப் - பண்ணை" – ஆகிய சிறுகதைத் தொகுதிகளையும் வெளியிட்டார்.

'கலைக்கோவில்', 'வீரத்தேவன்', 'வீராங்கனையின் வெற்றி', ஆகிய நாவல்களைப் படைத்தளித்துள்ளார்.

எமர்ஸன், வால்ட் விட்மன் ஆகியவர்களின் வாழ்க்கை வரலாறுகளையும், 'ஜப்பான் விஜயம்', 'நான் கண்ட ரஷ்யா', 'ஆப்பிரிக்கப் பயணம்'- ஆகிய பயண நூல்களையும் எழுதியுள்ளார்.

பிரான்ஸ் நாட்டு எழுத்தாளர் விக்டர் ஹியூகோ எழுதிய உலகப் புகழ்பெற்ற 'லே மிசிரபிள் (Lay missirable)' என்ற நவீனத்தைப் பாமரரும் படித்து மகிழும் வண்ணம் 'ஏழைபடும் பாடு' என்ற பெயரில் தமிழில் மொழி பெயர்த்தார்.

புவியெலாம் போற்றிய அக்கவியோகியின் "பாரத சக்தி, மகா காவியம்" என்னும் நூலுக்குத் தமிழக அரசினால் தோற்றுவிக்கப்பட்ட "மாமன்னன் இராசராசன் விருது"- 1984 ஆம் ஆண்டு முதன் முதலில் தஞ்சையில் வழங்கப்பட்டது.

தமிழாலயம் அமைக்க வேண்டுகோள் விடுத்தார். தமிழாலயத்தில், மொழி-இலக்கியம் - நுண்கலை-நல்வழி-வீரம்-தொழில்-வேளாண்மை-பொருளாதாரம்-கல்வி-அரசியல் போன்ற துறைகளை வளர்க்கத் திட்டம் தீட்டி வழி அமைத்துள்ளார்.

தமிழக அரசும் கவியோகியின் வேண்டுகோளின்படி தமிழாலயம் அமைத்து, அவரின் வழி முறைகளை நடைமுறைப்படுத்தினால் தமிழரும், தமிழும் உயர்வடையலாம். வளமான தமிழகம் படைக்கலாம்.

சிவகங்கை அருகில் சோழபுரம் என்கிற கிராமத்தில் முப்பது ஏக்கர் நிலப்பரப்பில் 'சுத்தானந்த யோக சமாஜம்' அமைந்துள்ளது. அந்த வளாகத்தில் 'சுத்தானந்த பாரதி வித்யாலயம் - மேல்நிலைப்பள்ளி', நடைபெற்று வருகிறது.

சென்னை திருவான்மியூரில் 'சுத்தானந்த நூலகமும்', 'கவியோகி நூல் வெளியீட்டு நிலையமும்' நடைபெற்று வருகின்றன.

'தன்மொழியே தலைசிறந்த மொழி என்பதை உணர்ந்து, தமிழ் மொழிக்குத் தொண்டு புரிந்தவர் கவியோகி' என நாமக்கல் கவிஞர் புகழ்ந்து போற்றியுள்ளார்.

சிருங்கேரி சங்கராச்சார்ய சுவாமிகள் 'கவியோகி' – 'பாரதி' – என்று பட்டமளித்துப் பாராட்டினார்.

தமிழுக்கு உழைக்கவும், பிற மொழிகளைக் கற்கவும், தமிழ் மொழியை விரிந்த கலைக்கடல் ஆக்கவும் கடைசிவரை பாடுபட்டார்!

கவியோகி 07.03.1990 ஆம் நாள் மறைந்தார். அவரது வழியில் தமிழ் வளர்ச்சிக்குச் செயல்படுவதே இன்றைக்கு நாம் செய்ய வேண்டிய அரிய செயலாகும்.

- பி.தயாளன்


பாரத சக்தி மகா காவியம்

பாரத சக்தி மகா காவியம், கவியோகி சுத்தானந்த பாரதியாரால் இயற்றப்பட்ட ஒரு மகத்தான தமிழ்க் காப்பியம் ஆகும். இது 5 காண்டங்கள் மற்றும் 136 படலங்களைக் கொண்ட 50,000 அடிகளைக் கொண்ட பெருநூல். இந்திய ஆன்மிகம், தேசியம் மற்றும் சமயோக தத்துவத்தை மையமாகக் கொண்டு, போரும் பூசலும் அற்ற சமுதாயத்தை வலியுறுத்துகிறது.

பாரத சக்தி மகா காவியம் பற்றிய முக்கிய அம்சங்கள்:

- **ஆசிரியர்:** கவியோகி சுத்தானந்த பாரதியார்.
- **சிறப்புப் பெயர்:** 'சமயோக வேதம்' (ஆன்மீக ஆற்றலால் உலகை இணைக்கும் வேதம்).
- **படைப்பு அமைப்பு:** சித்தி காண்டம், கௌரி காண்டம், சாதன காண்டம், தானவ காண்டம், சுத்த சக்தி காண்டம் என 5 காண்டங்கள்.
- **பதிப்பு விவரங்கள்:** முதல் பதிப்பு 1948லும், விரிவுபடுத்தப்பட்ட பதிப்பு 1969லும் வெளியானது.
- **பொருள்:** பாரதத் தாயின் சக்தி, விடுதலைப் போராட்டம் மற்றும் ஆன்மீக எழுச்சியைப் பாடுகிறது.

இந்த நூல் தமிழ் இலக்கியத்தில் இருபதாம் நூற்றாண்டின் மிக முக்கியக் காப்பியமாகக் கருதப்படுகிறது.



https://archive.org/details/acc.-no.-2342-bharatha-sakthi-maha-kaviyam-1948

பாரத சக்தி மகா காவியம் (1948) சுத்தானந்த பாரதியால் இயற்றப்பட்ட தமிழ்க் காப்பியம். இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய குறிப்பிடத்தகுந்த காப்பிய நூல்களுள் ஒன்று. 'சமயோக வேதம்' என்றும் இந்நூல் அழைக்கப்படுகிறது. அனைத்து மதங்களுக்கும் சமமான பல கருத்துக்கள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. இந்நூலுக்கு தமிழக அரசின் இராஜராஜன் விருது கிடைத்தது. பாரத சக்தி மகா காவியம், 50000 அடிகளைக் கொண்ட தமிழின் மிக நீண்ட காவியம்.

அரவிந்தர் ஆசிரமத்தில் 20 ஆண்டுகள் மௌன யோகத்தில் இருந்த சுத்தானந்த பாரதியார், யோகி அரவிந்தர் எழுதிய சாவித்ரி காப்பியம் பற்றி அறிந்தார். அதன் தாக்கத்தால் தமிழில் தானும் ஒரு காப்பியம் இயற்ற வேண்டும் என்று ஆவல் கொண்டார். அப்படி அவர் இயற்றியதுதான் 'பாரத சக்தி மகா காவியம்'. இக்காப்பியம், வை. கோவிந்தன் பதிப்பாளராக இருந்த 'சக்தி' இதழில், 1939 முதல் வெளிவந்தது. 1948-ல் நூலாக அச்சிடப்பட்டது. விரிவுபடுத்தப்பட்ட இரண்டாம் பதிப்பு 1969-ல் வெளிவந்தது. அதன் பின் பல மறுபதிப்புகள் வெளிவந்தன.

பாரத சக்தி மகா காவியம்

https://www.tamilvu.org/courses/degree/a011/a0114/html/A0114222.htm#book5

2.2 கதை மாந்தர்

கதை நிகழ்வுகளை முன்னெடுத்துச் செல்பவர் கதை மாந்தர்கள் ஆவர். இக்காப்பியத்துள் கதை மாந்தர்கள் பலர் உள்ளனர். அக்கதை மாந்தர்களை இருவகைப்படுத்தலாம். அவை, (1) தலைமை மாந்தர் (2) துணைமாந்தர் எனலாம்.

பாரத சக்தி மகா காவியத்தின் தலைமை மாந்தராகச் **சுத்தன்** திகழ்கிறான். அவனே காப்பியத்தின் நடுநாயகமாக உள்ளான். அவனைச் சுற்றியே எல்லா

மாந்தர்களும் எல்லா நிகழ்ச்சிகளும் அமைந்துள்ளன. ஏனைய காவிய மாந்தர்களான **சத்தியன், சித்திமான், கௌரி, போகன், கலியன், மாவலி, சுந்தரி, சக்தி, தூமகேது** முதலியவர்கள் துணைமாந்தர்களாக உள்ளனர்.

இனி, காப்பியத் தலைமகனாகிய சுத்தன் பற்றிய கருத்துகளை ஒருவாறு தொகுத்துக் காண்பது காப்பிய நோக்கைப் புரிந்துகொள்ள உதவும்.

2.2.1 சுத்தன்

• பிறப்பு

பூரணம் பெறும் பாரத புண்ணிய பூமியில் மனு, மதி ஆகியோரின் வழித்தோன்றல்கள் பலர் தோன்றினர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் பரதன், தென்னவர், வளவர், சேரர், பிரகலாதன், இராமன், சீதை, மாருதி, கண்ணன், பாண்டவர், புத்தன், மகாவீரர், அசோகன், அப்பர், சம்பந்தர், சுந்தரர், வாதவூரடிகள், ஆதிசங்கரர், கிறித்து, முகம்மது, கோவிந்தசிங், இராமதாசு, இராம்மோகன், தயானந்தன், பரமஹம்சர் முதலியோர் இவர்களின் வழியில் இறுதியில் வந்தவன் **சத்தியன்**. அவன் சித்திமாநகரை அறநெறி பிறழாமல் ஆண்டு வந்தான். நாட்டு நன்மையே நாட்டமாகக் கொண்டு பண்புடன் அரசாட்சி புரிந்தான். அவன் மனைவி **இந்திரை** ஆவாள். மன்னன் சத்தியன், அரசி இந்திரை ஆகியோரின் நல்லறப் பயனாய்ச் **சுத்தன்** பிறந்தான். கவியோகி சுத்தானந்தர், சுத்தனின் பிறந்தநாள் குறிப்பையும் பெருமையையும் கீழ்க்காணுமாறு குறிப்பிடுகிறார்.

ஆவணி மூலத்தில் அவத ரித்தவன்
பூவணி யாகவே பொலிவன்; புண்ணியர்
நாவணி எனத்திரு நாமம் ஓதுவார்
பாவணி புலவர்கள் இவனைப் பாடுவார்

(பாரத சக்தி மகாகாவியம், சித்திகாண்டம்-10, சுத்தநாமப் படலம் : 60)

(**ஆவணி மூலம்** = ஆவணித் திங்கள் மூல நட்சத்திரம்; **பூ அணியாக** = உலகிற்கு அழகாக)

• கல்வி

கல்வி கற்கும் அகவையை அடைந்ததும் சத்தியன் தன் மகன் சுத்தனைத் தன் குலகுருவிடம் கல்வி கற்க ஒப்படைத்தான். சுத்தன் தன் ஆசானிடம் பன்னிரண்டாண்டுகள் கல்வி பயின்றான். செந்தமிழ், ஆரியம், ஆங்கிலம், இந்தி மொழிகளை எல்லாம் கற்றான். யோகம், தருமம், நீதிநெறி முறைகளையும், கணக்கு மற்றும் அறிவு நூல்களையும் கற்றான்.

ஏட்டினில் எத்தனை கற்றாலும் அவற்றுடன் உலக நடையைக் கற்றுணரவே கல்வி முழுமை பெறுகிறது. சுத்தனும் தன் தந்தையின் ஆணையின்படி அமைச்சன் சித்திமானுடன் 'நீதி ஆட்சி நிலவு நன்னாடெலாம்' காணப் புறப்பட்டான். அவன் வருகையை அறிந்த மன்னர்கள் வரவேற்றனர். அவனை அரியணையில் அமரச் செய்தனர்; அரசியல் சிறப்பை எல்லாம் அவனுக்கு எடுத்து மொழிந்தனர்; பரிசுகள் வழங்கிச் சிறப்பித்தனர்.

• கலியன் முதல் வீழ்ச்சி

சுத்தன் பஞ்சவடியில் சாந்தமா முனிவரின் அருளைப் பெற்றான். கலியன் அரக்கர்களின் துணையோடு கலகம் செய்ய முற்படுவதை, சாந்த முனிவர் சுத்தனுக்குத் தெரிவித்தார். அவன் வேண்டுகோளை ஏற்றுச் சுத்தனுக்கு இராமாயணக் கதையை உரைத்தார். அதனைக் கேட்டு சுத்தன் மகிழ்ந்திருந்தான். அச்சமயம் கலிநகர் சென்ற ஒற்றர்கள் வந்தனர். அவர்கள் சுத்தனும் அமைச்சன் சித்திமானும் சித்திமாநகர்க்குத் திரும்பிச் செல்வதே உத்தமம் என்றனர். சாந்த முனிவர் பக்த இராமதாசர், சிவாஜி வரலாற்றையும் அவர்களுக்கு உரைத்தார். இச்சமயம் பஞ்சவடியிலேயே கலியனின் வீரர்கள் நுழைந்தனர். சொல்ல ஒண்ணாக் கொடுமைகளைப் புரிந்தனர். சுத்தனும் சித்திமானும் போரை எதிர்கொண்டு இறுதியில் வென்றனர். பின்னர்ச் சித்தி மாநகர்க்குப் புறப்பட்டனர்.

இறையருள் நாட்டமும் மன அமைதியும் வேண்டிய சுத்தன் போர் வந்தபோது அஞ்சாமல் எதிர்கொண்டு வெற்றி பெற்றதால், அவன் கடமை உணர்ச்சி மிகுந்த மன்னன் என்பதை அறியலாம்.

- **சுத்தன், கௌரி சந்திப்பு**

மன்னன் சத்தியன் அரசாட்சியை மகனிடம் ஒப்படைத்துவிட்டுத் துறவு பூண எண்ணினான். தன் எண்ணத்தை அரசவையில் வெளிப்படுத்தினான். அமைச்சர்கள் அவன் கருத்திற்கு இசைவு தந்தனர். மன்னனாக முடிசூடுவதற்கு முன் மகனுக்கு மணம் முடிக்க வேண்டும் என்னும் தன் எண்ணத்தையும் அரசன் வெளிப்படுத்தினான்.

சுத்தன் பிறந்த நாள் விழாவில் அழகுக் கன்னியர் பலரும் பங்கு கொண்டனர். எவரிடத்தும் சுத்தன் தன் காதல் உணர்வை வெளிப்படுத்தவில்லை. கௌரியைக் கண்ட மாத்திரத்தில், ‘திண்ணென மின்சாரத்தீ தெறிப்பது போல்’ உணர்ந்தான். இவனுக்கே அவள் பிறந்தாள், அவளுக்கே இவன் பிறந்தான் என்னும்படி அவ்விருவரும் உள்ளம் கலந்தனர்.

கௌரியைச் சுத்தனுக்கு மணம் முடிக்க மன்னன் எண்ணினான். சாந்த முனிவரின் கருத்தும் அதற்கு இசைவாக இருந்தது. ஆனால் சுத்தன் கௌரியை மணக்க விரும்பினாலும் கலியனை அழித்த பின்னரே மணம் புரிய இசைந்தான். சாந்த முனிவர் அவன் கௌரியை மணப்பதால் பல நன்மைகள் உண்டாகும் என்றும் நல்ல செயல்களைத் தள்ளிப்போட வேண்டாம் என்றும் கூறச் சுத்தன் கௌரியை வாழ்க்கைத் துணையாக ஏற்க இசைந்தான்.

சாந்த முனிவரின் மகள் பார்வதி பெற்ற மகள் கௌரி. அவளைக் கவியோகி அறிமுகம் செய்யும் பாங்கு அறியத்தக்கது.

மங்கலப் புன்னகை மலர்ந்த பொன்முகம்
பங்கய வேல்விழி பவள மூரல்வாய்
பொங்கிள மயில் ஒயில் அன்னம் போன்றவள்

(சித்தி காண்டம், 17, பஞ்சவடிப்படலம் : 113-115)

முதற்பார்வையிலேயே சுத்தனின் உள்ளத்தைக் கவர்ந்தாள். அவனுக்கு வாழை, மா, பலா ஆகியவற்றின் கனிகளையும் முதிர் பருப்புகளையும் பச்சிலைகளையும் ஆவின் பாலையும் அமுதாகப் படைத்து ஓம்பினாள்.

சாந்த முனிவர் இராமனின் வரலாற்றையும், இராவணன் வரலாற்றையும், அனுமன் வரலாற்றையும் விரிவாகச் சுத்தனுக்குக் கூறினார். அதனைக் கேட்ட சுத்தன் மகிழ்ந்தான்.

இன்பத்தில் இன்பமாம் இராம நாமத்தில்
அன்புடைத் தாஸரின் அரிய மாக்கதை
உன்புது வாக்கினால் உரைத்தி

(சித்தி காண்டம், 19, ஒற்றுக்கேள்விப் படலம் : 10-12)

▪ திருமணம்

இராமகிருஷ்ண பரமஹம்சர் வாழ்க்கையையும் விவேகானந்தர் வாழ்க்கையையும் சாந்த முனிவரால் சுத்தன் அறிந்து மகிழ்ந்தான். இல்லற வாழ்வே இனிதெனப் பாரத முனிவர் கூறக் கேட்ட சுத்தன் கௌரியை மணந்தான். திருமண நிகழ்ச்சியில் கலந்து கொண்ட சத்தியன், சித்திமான், பாரத முனிவர் உள்ளிட்டோர் மணமக்களை வாழ்த்தினர். சுத்தனும் கௌரியும் சிவனும் சக்தியும் போலத் தவ வாழ்க்கையில் திளைத்தனர்.

▪ அரங்கேற்றல்

மன்னன் சத்தியன் மகனுக்கு முடிசூட்ட எண்ணினான். ஆட்சியின் பொறுப்பை எண்ணி அவன் அதனை ஏற்கத் தயங்கினான். அவனை ஊக்குவித்து ஆட்சியை ஏற்குமாறு செய்தாள் கௌரி. மன்னனாகச் சுத்தனும் அரசியாகக் கௌரியும் முடிசூட்டப்பட்டனர். மக்கள் பசியும் பட்டினியும் இன்றி, தீய ஒழுக்கங்கள் இன்றி வாழ்வதற்கு வழி செய்வதாகச் சுத்தன் வாக்குறுதி அளித்தான். சாந்த முனிவர் கூறிய கண்ணனின் வாழ்விலும் அவன் நிகழ்த்திய கீதைப் பேருரையிலும் சுத்தன் ஆழ்ந்து தோய்ந்தான். பீஷ்மனின் தியாக வாழ்விலும் வீர வாழ்விலும் உள்ளம் பறிகொடுத்தான்.

▪ போர் அறம்

கலியன் சித்தியைக் கவரத் திட்டம் போட்டான். அது முறியடிக்கப்பட்டது. சத்தியன் போர்க்கோலம் பூண்டான். சுத்தன் போரில் வீரர்கள் கடைப்பிடிக்க வேண்டிய அறநெறிகளைக் கூறினான்.

பாலரைப் பெண்டிரைப் பசுவினைப்
பண்புடை முனிவரை, கவிஞரை,
சீயரைக் கல்வியின் செல்வரை
சேமமாய்க் காமினோ சேனையீர்

(கௌரி காண்டம் - 29, படையெழுந்த படலம் :89-92)

வீரர்களுக்கு எழுச்சியூட்டப் பிரதாப சிங்கனின் வரலாற்றைச் சுத்தன் சொன்னான். அவ்வீர வரலாற்றைக் கேட்ட சித்தியின் வீரர்கள் கிளர்ச்சியுற்றுக் கலியின் படைகளைப் புறங்காட்டச் செய்தனர். சுத்தனும் போர்க்களம் புக

ஆயத்தமானான். செருக்களத்தில் போர் வீரர்களுக்குத் தொண்டு செய்யக் கௌரியும் புறப்பட்டாள். போரில் புறங்காட்டிய கலியனைக் கொல்லாது 'நாளை வாளுடன் வா' என விடுத்தான். போரில் வெற்றி பெற்றும் அமைதியையே அவன் உள்ளம் நாடியது.

பொல்லாங்கு அறியாப் பொதுஜனங் களையே
ஊனும் கள்ளும் உயிர்க்கொலை வெறியும்
ஏற்றிப் போரில் இழுத்து நிறுத்திப்
பீரங்கி வாயில் பிணிபடச் செய்யும்
அதர்மக் கொடுமை அழியுநாள் என்றோ?

(கௌரி காண்டம் - 34, உறுதிப் படலம் : 64-68)

▪ பகைவனுக்கு அருளும் பண்பு

யானையைக் குழியில் தள்ளி வீழ்த்துவது போல் சுத்தனை வீழ்த்தக் கலியன் செய்த சதியை இளைய வீரன் வடிவம் பூண்ட கௌரி தடுத்தாள். சுத்தனைக் காத்தாள். ஆனால் அவளோ பகைவரின் அம்பிற்கு இரையானாள். அவளைப் பிரிந்த சுத்தன் அவளுக்காகக் கண்ணீர் வடித்தான். போரில் மீண்டும் கலியன் தோற்றான். தன்னை அடிபணிந்த கலியனைச் சுத்தன் விடுதலை செய்தான். ஆனால் கலியன் மீண்டும் படையெடுப்பதையே எண்ணினான். சத்தியன் இடத்திலே கலிநகர் இருப்பதால் வெகுண்ட வீரர்கள் மீண்டும் அவனைக் கைது செய்து சிறையில் இட்டனர்.

▪ பல்கலைக் கழகம்

போரில் உயிர்துறந்த தன் மனைவி கௌரியின் நினைவாகப் பல்கலைக் கழகம் ஒன்றைச் சுத்தன் நிறுவினான்.

▪ குடியாட்சி மலர்ந்தது

நல்லோரிடத்தில் ஆட்சியை ஒப்படைத்து விட்டுத் துறவு வாழ்க்கையை மேற்கொண்டு தவம் செய்யவே சுத்தன் விரும்பினான். இமயத்திலிருந்து திரும்பிய சாந்த முனிவர் நடந்தவற்றை அறிந்தார். சுத்தனை இமயத்திற்கு அழைத்துச் செல்வதாகவும் கூறினார்.

சுத்தன் இமயம் செல்லும்முன் நாட்டில் குடியரசாட்சி முறையை நடைமுறைப் படுத்தினான்.

முடியர சாட்சி முடிந்தது நண்பீர் !
குடியர சாட்சிக் கொடியை உயர்த்தினேன்
வாழ்க வாழ்க மானிட உரிமை
அச்சமும் அநீதியும் அடிமையும் ஒழிக !
தலைநிமிர் கவேசம த்துவ தருமம்.

(சாதன காண்டம், 2, சாசனப் படலம் : 34-38)

▪ தொண்டுள்ளம்

சுத்தன் அன்னையையும் அமைச்சனையும் மற்றுள்ளோரையும் பிரிந்து தவம் செய்யப் புறப்பட்டான். அவன் அன்னை இந்திரை நாட்டைக் காக்கும்

பணியை மேற்கொண்டாள். பல துறவிகளையும் வழிகளில் கண்டு அவர்களோடு வாதிட்டு வென்று காமபுரியை அடைந்தான். சாருவாகம், சாக்தம் என்னும் சமய நெறிகள் அங்குச் செல்வாக்குப் பெற்றிருந்தன. ஆடவரும் பெண்டிரும் கள்ளருந்தலிலும் காமக் களியாட்டங்களிலும் ஈடுபடுவதை கண்டு திகைத்தான். காமி-வாமி என்னும் இருவரும் தலைமை ஏற்க ஒழுக்கச் சீர்கேடுகள் காமபுரியில் மலிந்திருந்தன. சுத்தன் காரணமாக வாமியும் காமியும் அவர்களின் படைகளும் சண்டையிட்டுக் கொண்டன. சண்டையில் இருபடைகளிலும் பெரும் அழிவு ஏற்பட்டது. பின்பு சுத்தன் காமபுரி மக்களைச் சந்தித்து அவர்களுக்கு இறை உணர்வையும் ஆன்ம இருப்பையும் உணர்த்தி அவர்களை நல்வழிப்படுத்தினான். மழையின்றி மக்கள் வாடியதைக் கண்டு, கடவுளைத் தொழுது மழை பொழியச் செய்தான்.

- **புத்தர், மகாவீரர்**

காமபுரியை நீங்கிப் புத்தபுரியை அடைந்தான். தருமசேனர் புத்தரின் வாழ்க்கை வரலாற்றையும் கருத்துரைகளையும் அவனுக்கு விளக்கிக் கூறினார். அதன்பின் ஜீனவரன் என்னும் சமண சாது மகாவீரரின் வாழ்க்கை வரலாற்றையும் தத்துவங்களையும் கூறச் சுத்தன் அறிந்து தேர்ந்தான்.



புத்தர்

பெரிதாய்க் காணப் படக்காட்சியை அழுத்துக

- **இயேசு கிறித்து, நபிகள் நாயகம்**

இயேசுதாசு என்னும் கிறித்தவர் சுத்தனுக்கு இயேசு கிறித்துவின் வரலாற்றையும் போதனையையும் கூறினார். அவற்றைக் கேட்டுச் சுத்தன் மெய்யுணர்வு எய்தினான். அப்துல்லா என்னும் சான்றோர் மௌல்வி நபி நாயகம் அவர்களின் வாழ்க்கையையும் இசுலாமிய சமய உண்மைகளையும் சுத்தனுக்கு அறிவுறுத்தினார்.




இயேசு கிறித்து

பெரிதாய்க் காணப் படக்காட்சியை அழுத்துக

• குருநானக், கபீர்

சுந்தர சிங் என்னும் சீக்கியர் குருநானக்கின் வாழ்க்கை வரலாற்றையும் சமய நெறிகளையும் சுத்தனுக்கு விவரித்துரைத்தார். சீக்கியரிடத்தில் விடை பெறுமுன் கபீர்தாசின் வாழ்க்கைச் சிறப்பைத் தான் அறிந்தபடி அவர்களின் நெஞ்சம் நெகிழ இசைத்தான்.



குருநானக்

பெரிதாய்க் காணப் படக்காட்சியை அழுத்துக

• ஜரதுஷ்ட்ரர்

பின்னர் ஆரியமான் என்பவரோடு அக்கினி நகரை அடைந்தான் சுத்தன். ஆரியமான் ஜரதுஷ்ட்ரர் வாழ்க்கை வரலாற்றையும் அவர்தம் கருத்துரைகளையும் சுத்தனுக்கு அறிவுறுத்தினார்.

• வைதிகம்

சுத்தன் தேவதாசுடன் வேதபுரிக்குச் செல்லும் வழியில் தீயவர்களால் நையப் புடைக்கப்பட்டு, காலொடிந்தும் அவர்களுக்கு அன்பு காட்டினான். தேவதாசின் பணிவிடையாலும் சக்தியின் அருளாலும் உடைந்த கால் ஒட்டிக் கொண்டது. தன் சமய அனுபவங்கள் அனைத்தும் நூலாக்கித் தன்பால் நேயமுடையோர்க்குச் சுத்தன் அளித்தான். அவர்கள் வன்கொடுமை வழிவிடுத்து நன்னெறியில் நின்றனர்.

வேதபுரி சாதிப்பிரிவினைகளால் சிதைவுற்றிருந்தது. வேத நெறிகள் பின்பற்றப்படவில்லை. போலி ஞானங்கள் பேசியே வேதியர்கள் பொழுதினைக் கழித்தனர். சில சாதியார் கோயிலுள் நுழையவும் தடை விதித்தனர். இறைவனை மறந்தனர். சுத்தனை அரட்டர்கள் மறித்து,

என்ன சாதிஎம் மதம்குலம் கோத்திரம் என்னே?
என்ன கோயிலில் எவ்வகை எவ்வுருத் தொழுவாம்?
உன்னை உய்விக்கும் குருபெயர் உரை

(சாதன காண்டம், 18, வேதபுரிப் படலம் : 126-128)

(**உய்விக்கும்** = வழிநடத்தும்)

என்று கேள்விக் கணைகளைத் தொடுத்தனர்.

அவற்றிற்கு அவன்

மனிதச் சாதியான், மனிதரின் குலம் ; உலகு எல்லாம்
எனது கோயிலாம் இதயத்தில் இருப்பதுஎன் இறையாம்.

மனதை வென்றவன் மமதையைக் கொன்றவன் குருவாம்   ***புனித நெஞ்சுஉரை போதமே வேதமென்று அறிவீர்.***
(சாதன காண்டம், 18, வேதபுரிப் படலம் : 129-132)
(**மமதையைக் கொன்றவன்** = அகந்தையை அழித்தவன்)
வேதபுரியில் திருமால் நெறியினரின் வேதநெறிக்கு மாறான வாழ்க்கையைக் கண்ட சுத்தன் வெம்பினான். வேதப்பொருளை அனைவரும் அறியச் சுத்தன் சொற்பெருக்காற்றினான். தயானந்தரின் தூய வாழ்வை விவரித்தான். சங்கரரின் வாழ்க்கை உணர்த்தும் உண்மைகளை வெளிப்படுத்தினான்.
• **சைவம்**
பின்னர் ஒப்புயர்வு அற்ற ஞானச் சிவகிரியைச் சுத்தன் அடைந்தான். அங்கே சத்திய உருவாய் உள்ள சதானந்த யோகியைக் கண்டு மனம் உருகி வழிபட்டு அவரையே குருவாகத் தேர்ந்தான். அவர் அவனுக்கு ஞானத்தைக் கற்பித்தார். அவர் அவனுக்குச் சிவஞானபோதம் என்னும் சைவ சித்தாந்த மெய்ப்பொருள் நூலைக் கற்பித்தார். மாணிக்கவாசகர், அப்பர், தாயுமானவர், வள்ளலார் ஆகியோரின் குறிக்கோள் வாழ்க்கையை விளங்க உரைத்தார். அவர் காட்டிய வழியில் நின்று அற்புதமான சித்தியினை அடைந்தான்.

வள்ளலார்
பெரிதாய்க் காணப் படக்காட்சியை அழுத்துக
• **வேதாந்தம்**
சாந்த முனிவர் துணையால் சுத்தன் அண்ணாமலையில் உள்ள அருணஹம்ஸ பகவனைக் கண்டான். அருணஹம்ஸ பகவன் சாந்த முனிவரையும் சுத்தனையும் வரவேற்று உண்ணச் செய்தார். அவர் அருளால் பரமானந்த நிட்டை சித்தனுக்குக் கிட்டிற்று. உண்மை அறிவே யோக சித்தருக்கு உரியது என்பதைக் கண்டான்.
பின்னர், புதுவை யோகி அரவிந்தர் நிலையத்தைச் சாந்த முனிவரும் சுத்தனும் அடைந்தனர். அங்கு அவன் அரவிந்தர் தவவாழ்வையும் அலிப்பூர்ச் சிறையில் யோகசித்தி அடைந்ததையும் அறிந்தான்.

அரவிந்தர்

பெரிதாய்க் காணப் படக்காட்சியை அழுத்துக

• சமரச சன்மார்க்கம்

அதன் பின் வடலூர் சென்று இராமலிங்கர் அமைத்த சுத்த சமரச சன்மார்க்கச் சங்கத்தைக் கண்டான். ஆன்ம நேய ஒருமைப்பாட்டை உலகிற்குத் தந்த வள்ளல் அவர் என்னும் உண்மையை அறிந்தான்.

• இமயப் பயணம்

அங்கிருந்து இமயமலைக்குச் சுத்தனும் சாந்த முனிவரும் சென்றனர். தவம் செய்தற்கு ஏற்ற இடமான இமயம் ஆத்தும சக்தியின் அணிவளர் முடிபோல் காட்சி அளித்தது. அகத்தியரும், திருமூலரும், சத்தியதரிசியும், பரஞ்சோதியும் சிவனருள் பெற்றதும் இமயம் என்பதை அறிந்தான். பல யோக முறைகளையும் கற்றான்; குண்டலினிக் கனலால் குளிரைப் போக்கும் வழிவகை தெரிந்தான். சிவானந்தரைக் கண்டு அவர் அமைத்த சமயோக சமரசத்தையும் சாந்த முனிவரும் சுத்தனும் கண்டனர். பத்ரிநாத், கேதார்நாத் ஆகிய இடங்களையும் கண்ட பின்னர் ஓரிடத்தைச் சுட்டிக் காட்டிச் சாந்த முனிவர்,

சுத்தநீ இங்கே சக்தி சதாசிவன்
அருளை நோக்கி அருந்தவம் செய்வாய்

(சாதன காண்டம், இமாலயப் படலம் : 201-202)

எனக் கூறினார். சுத்தனும் அதன்படி தவம் செய்து சுத்த சக்தியாஞ் சுடர் தவக் கனலில் ஊற்றாகிப் பொலிந்தான்.

சாந்த முனிவர் அருளால் சுத்தன் சமயோக சித்தியை அடைந்தான். தன்னைச் சூழநின்ற சங்கத்தார்க்குத் தான் அவதாரமோ, இறைவனோ, குருவோ இல்லை; உழைத்திடும் தொண்டர் கூட்டத்துள் ஒருவன் என்று பணிவுடன் மொழிந்தான்.

• தானவ நாட்டில்

போகரின் வரவால் தானவர் நாட்டில் தன் தந்தை சத்தியன் செய்த பணிகளை அறிந்தான்; சுந்தரியும் சக்தியும் செய்த உதவிகளை அறிந்தான். மாவலியின் நாட்டு மக்கள் மறவழி மறந்து அறவழி திரும்பினர். ஒழுக்கநெறி நின்றனர். நிலைமை மாறியதை அறிந்த மாவலி சினம் கொண்டான். தனக்கு எதிராகச் செயல்படும் அனைவரையும் பீரங்கியால் சுட்டொழிக்க ஆணை இட்டான். போக முனிவர் இறையருளை இதயத்து இருத்தி அரக்கர்கள் செயல்படாமல் மந்திரம் செபித்தார்; சத்தியனும் உளம் கசிந்து இறைவன் அருளை வேண்டினான்.

அடுத்த நாள் மாவலியின் ஆணையால் சத்தியனும் போகரும் சிறையில் அடைக்கப்பட்டனர். இதனை அறிந்த அன்பர்கள் சுந்தரியின் தலைமையில் சிறை புக ஆயத்தம் ஆயினர். சுந்தரியும் சிறைப்பட்டாள். சிறைப்பட்டவர்களை விடுவிக்க வேண்டிச் சக்தி உண்ணாநோன்பு இருந்தாள். அன்பர்கள் அனைவரையும் விடுவிக்கக் கிளர்ச்சி செய்தனர். மாவலி அனைவரையும் சுட ஆணையிட்டான். சக்தி அதனைத் தடுத்தாள். அச்சமயம் விமானங்கள் குண்டுகள் பொழிந்தன.

எங்கும் இருள்சூழ அன்பர்கள் சிறையைத் தகர்த்து அனைவரையும் விடுவித்தனர். சத்தியனும் போகனும் சுந்தரியும் சக்தியும் விமானம் ஏறிச் சீகரம் சென்றனர்.

இவ்வாறு தானவ நாட்டில் நிகழ்ந்தவற்றைச் சுத்தனுக்குப் போகன் உரைத்தான்.

• பாரத சக்தி

இமயத்தில் தன்னைச் சூழ இருந்த யோகசித்தி எய்திய அன்பர்களுக்குச் சில கருத்துரைகளைச் சுத்தன் வழங்கினான். மக்களை வருத்தும் மாவலி, தூமகேது உள்ளிட்ட அரக்கர் அழியவேண்டும். நாட்டினைத் திருத்தி வளமாக்க வேண்டும். அதற்கேற்ற தருணம் வாய்த்துள்ளது. தொண்டு செய்ய ஆயத்தமாகுங்கள் என்று தொண்டர்களை ஊக்கினான். பாரத சக்தியின் பெருமையைப் பலபட எடுத்துரைத்தான்.

அரக்கர் தீமையை வேருடன் அழித்திடும் ; தணலைச்
சுரக்கும் திவ்விய சுதந்தரச் சுடர்பெறும் சக்தி
இரக்கம் அன்புஅருள் ஈகைதி யாகவிவேகம்
பரக்க நல்கிடும் செல்வமாம் பாரத சக்தி

(சுத்தசக்தி காண்டம்,1, புதுநாட்டபடலம் : 149-152)

(**தணல்** = நெருப்பு ; **திவ்விய** = தெய்வத் தன்மை)

• சித்திமான் நிகழ்வுரை

பாரத முனிவரும் சித்திமானும் சுத்தனைச் சந்தித்தனர். சித்திமான் சுத்தனின் தவ ஆற்றலைப் புகழ்ந்தான். கலியனும் தூமகேதுக்களும் செய்த கொடுமைகளை எடுத்துரைத்தான். அவர்களின் கொடுமைகளிலிருந்து மக்களுக்கு விடுதலை தந்திட வேண்டுமெனவும் கூறினான். சுத்தன் துறவறம் பூணச் சென்றதும் இந்திரை தகவுற அரசு நடத்தியதும் நாட்டைக் காத்ததும் கலியனின் ஆட்கள் பல்வகை வேடம் பூண்டு நாட்டில் நுழைந்ததும் அதனை அறிந்து சபையினர்க்குத் தெரிவித்ததும், கலியன் படையெடுத்துச் சித்தியைக் கைப்பற்றியதும் அவனைத் தூமகேது சிறைபிடித்ததும் சொன்னான். நாடு அயலவர் கைப்பட்டதற்காகச் சுத்தன் கண்ணீர் சிந்தினான். அரக்கரால் சூழப்பட்ட சித்தியை வீரர்கள் கடும்போர் புரிந்து மீட்டனர் என்பதை எல்லாம் கூறிச் சித்திமான் சுத்தனை நாட்டிற்கு எழுந்தருள வேண்டினான்.

• கௌரி - சக்தி வருக

சக்தியைச் சுத்தன் கண்டான். போரில் உயிர் துறந்த கௌரி சக்தியின் வடிவம் பெற்றாள் என்பதை அறிந்தான்.

வருக கௌரியே, வருகநின் வாழ்வுஇனிப் பொலிக !
தருக நின்னைஇத் தரைமிசை தருமம்ஓங் கிடவே
வருக சக்தியே பாரத சக்தியாய் வாழ்க
தருக நின்னையே தானவர் குலந்திருந் திடவே.

(சுத்த சக்தி காண்டம், 6, சக்தி விஜயப்படலம் : 37-40)

சுத்தன் தன் உள்ளத்து எழும் கருத்துகளை எல்லாம் அறிந்து போற்றியவள் சக்தி என்று அவளைப் பாராட்டினான்.

• போர் தொடுப்போம்

மானுடத்தின் மீது தீரா நேயமும் அன்பும் உடையவன் சுத்தன். எனினும் அரக்கர் போர் தொடுத்தால் தாமும் போர் தொடுப்பது பொருந்தும் என்றான் சுத்தன்.

தீரமும் வேண்டும் ; உள்ளத் திண்மையும் வேண்டும் ; ஆத்ம
வீரமும் வேண்டும் ஊணர் வெறிஎழுப் படைந டத்தி
போரினை தொடுத்தால், யாமும் போருக்குப் போர்தொடுத்து
வேரொடும் தீமை சாய விடுதலை வழங்கு வோமே

(சுத்த சக்தி காண்டம், 6, சக்தி விஜயப் படலம் : 121-124)

• யோக சித்திப் படலம்

சுத்தன் **யோக சித்திப் படலம்** என்னும் நூலைத் தீட்டி மானுடம் பயன் பெறத் தந்தான். அதனைக் கடவுள் இயல், உலகியல், அறவியல், அறிவியல், அன்பியல், நடையியல், இல்லறவியல், குலவியல், தொழிலியல், அருளரசியல், யோகவியல், சித்தியியல் என 12 இயல்களாகப் பகுத்துக் கொண்டான். இந்நூல் வாழ்வியலுக்கு நன்னெறி வகுத்துத் தருவது, சான்றாக, வறுமை வரக் காரணம்

வீண்அணி ஆடை விருந்து மணச் செலவு
காண்வறுமை காட்டி விடும்

(சுத்தசக்தி காண்டம், 8, யோகசித்திப் படலம் : 405-406)

முயன்றால் முடியாதது ஒன்றும் இல்லை. இதற்குச் சான்றாக, பகீரதன் உள்ளான் என்பது சுத்தன் சிந்தனை.

தங்கு முயற்சியால் சாராதது ஒன்றில்லை
கங்கை கொணர்ந்தோன் கரி.

(சுத்தசக்தி காண்டம், 8, யோகசித்திப் படலம் : 423-424)

இயற்கைதரும் சக்திகளை யந்திரத்தில் ஊக்கிச்
செயற்கரிய நன்மையெலாம் செய்.

(சுத்த சக்தி காண்டம், 8, யோகசித்திப் படலம் : 463-464)

(**கங்கை கொணர்ந்தோன்** = பகீரதன்; **கரி** = சாட்சி)

என்று இயற்கையில் நிரம்பிக் கிடக்கும் ஆற்றலைக் கண்டு அதனை எந்திரங்களின் உதவியால் பயன்படுத்தி மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்பது இதன் பொருள்.

இவ்வாறு பற்பல நற்சிந்தனைகளைத் தன் தொண்டர்களுக்கு வழங்கினான் சுத்தன்.

• தொண்டர் பணிக்குழுக்கள்

சுத்தன் தன் தொண்டர்களை எல்லாம் 12 குழுக்களாக வகுத்துத் தொண்டு செய்யப் பணித்தான். அக்குழுக்கள் ஆவன :

(1) கடவுள் குழு (2) உலகக் குழு (3) அறவோர் குழு (4) அறிஞர் குழு (5) அன்புக் குழு (6) நன்னடைக் குழு (7) இல்லறக் குழு (8) குலக்குழு (9) தொழிற்குழு (10) அரசியற்குழு (11) யோகக் குழு (12) சித்தர் குழு

பாரத முனிவன் தொண்டர்களுக்குக் கூறிய காந்தி அண்ணலின் ஆன்மிக ஆற்றலை அறிந்த சுத்தன் அவர் (காந்தி அண்ணல்) புத்தனைப் போன்றும் கிறித்துவைப் போன்றும் கருணை உள்ளம் கொண்டு தன் உயிரை மன்னுயிர்க்காகத் துறந்தார். அவ்வாறே தொண்டர்கள் மக்கள் சேவைக்குத் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்றான். நாத்திகம் ஒழியவும் மகளிர் சிறக்கவும் ஒழுக்கம் சீர்பெறவும் எனத் தொண்டுகளைத் தொண்டர்கள் செய்யலாயினர். அல்லல் ஒழிந்து அறம் தலைநிமிரத் தக்க வகையில் அவர்களின் தொண்டு திகழ்ந்தது. அரக்கர்களின் அடிமை விலங்கை உடைத்தெறியும் சூழலைத் தொண்டர்கள் உண்டாக்கினர்.

- **சுத்தன் அருள்**

மோகியின் மோகவலையில் கட்டுண்டு அடாதன செய்த கலியன் சுத்தனின் அருளால் திருந்தினான். அடிமை வாழ்க்கை ஒழிந்ததெனத் தெளிவுற்றான்.

ஆவியினும் அரியநலம் ஆகியதன் உரிமையினைப்
பாவமெனும் படுசிறையில் பந்தனைசெய் கலியவனும்
சீவனிலே சுத்தவொளி புகுந்திடவே திருந்தி வந்தான்
ஏவரெமை இனியடிமை என்றடக்க வல்லவரே

(சுத்தசக்தி காண்டம், 15, கலி பணித்த படலம் : 5-8)

(**பந்தனை** = கட்டுதல், பிணித்தல் ; **சீவன்** = உயிர், ஆன்மா)

சுத்தனின் பதமலர் துதித்து நாயினேன்
சித்தமும் திருந்தினன் செய்கை சீர்உற்றேன்
அத்தகு குருபணிக்கு ஆசை கொண்டினும்
இத்தகு மானிடம் ஏந்தி நிற்கின்றேன்.

(சுத்தசக்தி காண்டம், 15, கலி பணித்த படலம் : 213-216)

என்ற கலியனின் வாய்மொழி அவன் திருந்திச் சுத்தனின் மானுடத் தொண்டிற்காகத் தன்னை ஈடுபடுத்திக் கொண்டதைப் புலப்படுத்துகிறது.

சுந்தரியின் கணவன் மாவலி அவன் மாமன் சீகரனால் வரவேற்கப்பட்டான். அவன் சுத்தனின் பெருமைகளைக் கூறினான், சத்திய யோகச் சங்கத்தின் பெருமைகளையும் கூறினான். அவற்றைக் கேட்ட மாவலியும் ஆணவம் அழிய

சென்றது செல்க ; நானும் திருந்தினேன்; அறிந்தேன் உண்மை ;
நன்றிது நானும் சுத்த நாயகன் சேவை செய்வேன்

என்று கூறினான்.

2.2.2 கலியன்

நற்பண்புகள், நற்செயல்கள் உடைய சுத்தனின் எதிர்நிலைத் தலைவனாகக் கலியன் படைக்கப்பட்டான். இவன் சத்தியனின் உடன் பிறந்தான் ஆவான். சித்தி நகரின் கீர்த்தியை அழிப்பதை நோக்கமாகக் கொண்டான். அவன் பொறாமையின்

வடிவமாய் விளங்கினான். அவன் பொறாமைக்குச் சுத்தனின் புகழ் காரணமாயிற்று. சுத்தனை எதிர்க்கக் கலிநகர் ஒன்றையும் அமைத்துக் கொண்டான். மந்திர மாயங்கள் மாறுபாடு செய்து சுத்தனை அழிக்கத் திட்டமிட்டான். அண்ணனுக்குப் பின் நாட்டை ஆள எண்ணிய எண்ணம் ஈடேறாமல் ஆனதற்குக் காரணம் சித்தன் என்பதை நினைத்து மனம் வெந்தான் கலியன். அதனைக் கண்டு வருந்திய அவன் மனைவி மோகி அண்ணன் மாவலியின் படை உதவியால் சித்தியைக் கைப்பற்றலாம் எனத் தன் சூழ்ச்சியை வெளிப்படுத்தினாள். அவள் உரை கேட்ட கலியன்

கவலையும் ஒழிந்தது ; கனவு மெய்த்தது ;
புவனமும் கிடைத்ததுன் பொன்சொ லால்இனி
எவரும்என் நிகரில்

(சுத்தசக்தி காண்டம், 13, பொறாமைப் படலம் : 69-71)

என்று விம்மிதமுற்றான் கலியன்.

சித்தியைக் கைப்பற்றப் படைகளைப் பெருக்கினான். சத்தியனின் தம்பியாயினும் அரக்க குணம் உடையவன் கலியன். தீக்குணங்களின் உறைவிடம்.

நச்சராப் போன்ற நெஞ்சன் ; நல்லதை வெறுக்கும் தீயன்
பச்சைமோ கினிபி டித்த பாதகன் ; காமக்கள்ளன்

(கௌரி காண்டம், 11, வாழ்க்கைப் படலம் : 105-106)

▪ கலியன் சூழ்ச்சி

சத்தியன் மணிமுடியைத் தரப் பாரத முனிவன் சுத்தனுக்கு அதனைச் சூட்டினான். மக்கள் மகிழ்ந்தனர். சித்தி நகரம் விழாக்கோலம் பூண்டது. இதனை ஏற்காத கலியன் மோகினியின் எண்ணப்படி காலிக் கூட்டத்தையும் காவி உடுத்திய போலிக் கூட்டத்தையும் புண்ணியம் பேசிடும் கேலிக் கூட்டத்தையும் சித்தியுள் நுழையச் செய்தான். சமயம் கிட்டும்போது சித்தியைப் கைப்பற்றவும் திட்டமிட்டான். மக்களும் போலித் துறவிகளை உண்மைத் துறவிகள் என எண்ணி உணவு அளித்து இருப்பிடமும் தந்தனர். போலித் துறவியான அகம்பரனின் பெருமைகளை அவனுடைய போலிச் சீடர்கள் மக்கள் இடையே பரவச் செய்தனர். பெண்களுடன் கூடிக் களித்தனர்.

▪ சிறைவாசம்

சுத்தன் ஒற்றர்களின் வழியாகக் கலியன் சூழ்ச்சியை அறிந்தான். தன் அமைச்சன் சித்திமானோடு கலந்து பேசினான். வஞ்சகர் தங்கியிருந்த சித்தினி பவனத்தை வளைத்து அனைவரையும் சிறைப்பிடித்தான்.

கலியனின் சதித்திட்டம் வெளிப்பட்டது. அகம்பரனுக்கு வாழ்நாள் சிறைத்தண்டனை வழங்கப்பட்டது. கலியன் போர் செய்ய எத்தனித்தான். கலியன் சித்திக்கு உரிமை கொண்டாடினான். கலியன் ஏவலால் மாயன் என்பவன் சித்திக் கோட்டையை முற்றுகை இட்டான். சித்தியைச் சேர்ந்த விசயன் போரில் மாயனை வென்றான்.

மேலும் மேலும் தோல்வியைக் கண்டாலும் கலியன் அடங்கவில்லை. சத்தியனே படை நடத்தி வாகை சூடினான். கலியன் சுத்தனோடு நடத்திய போரிலும் தோல்வியைத் தழுவினான். சுத்தனின் அடிபணிந்து இனிச் சித்தியின் பக்கம் வருவதில்லை என்றும் தன்னை விடுதலை செய்யும்படியும் வேண்டினான். சுத்தன் அவனை விடுவித்தான். எனினும் கலியன் மீண்டும் போர்தொடுக்கும் வஞ்சத்தோடு சத்தியனைக் காணும்போது தன் நாடு பறிபோனதை எண்ணி மனம் பதைத்தான். தன் ஆணவத்தால் சிறையில் அடைக்கப்பட்டான். சிறையிலிருந்து மோகியோடு தப்பித்து விமானத்தில் தானவர் தீவை அடைந்தான். மீண்டும் படை திரட்டிச் சித்தியின் மீது போர் தொடுக்க எண்ணினான். தானவர் தலைவன் மாவலி கலியனுக்கு உதவ முன்வந்தான்.

• மீண்டும் சிறைவாசம்

கலியனும் சித்தியின் படை ஆற்றலையும் நன்கு அறிந்திருந்தான். சத்தியனும் அவன் மகன் சுத்தனும் படையின் வலிமையோடு மனவலிமையும் உடையவர்கள். படைக்கலங்களால் அவர்களை வெல்ல முடியாது. அவர்கள் வரம் பெற்ற ஆற்றலர். எனவே அவர்களை வாதிலும் வெல்ல இயலாது. பூத சக்தியினாலும் அவர்களை வெல்ல இயலாது வெளிப்படுகிறது. ஆனால் வஞ்சனை செய்து சித்தியைக் கைப்பற்றலாம் எனத் தன் மைத்துனன் மாவலிக்கு உரைத்தான் கலியன்.

கலியன் சித்தி நாட்டில் புகுந்து அடாச் செயல்கள் செய்ய மக்களைத் தூண்டினான். அறவழியில் சென்ற மக்கள் மறவழியில் சென்றனர். அவனால் பெண்கள் மானம் இழந்தனர். செல்வர்கள் செல்வம் இழந்தனர். இல்லற உறவு கெட்டது. உறவாடியே மக்களைக் கெடுத்தான். செல்வத்தை அளவில்லாது சேர்த்துக் கொண்ட மன்னனென முடி சூட்டிக் கொள்ளத் திட்டமிட்டான். இதனை அறிந்த மாவலி தூமகேதுவை அனுப்பி அவனைச் சிறையில் அடைக்க ஆணை இட்டான். கலியனும் சிறையில் அடைக்கப்பட்டான். மோகியைத் தூமகேது கைப்பற்றிக் கொண்டான்.

• மனமாற்றம்

சிறைப்பட்ட கலியன் தன் இரக்கம் கொண்டான். தன் தமையன் சத்தியனுக்கும் நாட்டிற்கும் இழைத்த கொடுமைகளை எண்ணி வருந்தினான். சுத்தனைச் சார்ந்து தொண்டு செய்வதை விரும்பினான்.

ஐயனை என்னுடை அண்ணல் மைந்தனைத்
துய்யனை அடைந்தினித் தொண்டு செய்தலே
உய்வழி என்றனன்

(சுத்தசக்தி காண்டம், 4, தூமகேதுப் படலம் : 57-59)

(**ஐயன்** = தலைவன் ; **துய்யன்** = தூயவன்)

சுத்த சமயோகியரின் இடையறாத தொண்டால் நாட்டில் அமைதிப் புரட்சி நடந்தது. மக்கள் தூமகேதுவின் ஆட்சியை வெறுக்கத் தொடங்கினர். செயலற்ற தூமகேது கள்ளுண்ட மயக்கில் மோகியின் சொற்களை நம்பினான். நாட்டில்

அமைதிப் புரட்சி நடக்கக் கலியனே காரணம் என்றாள் மோகி. கலியனைக் கொல்ல அவனைத் தேடிப் புறப்பட்டான் தூமகேது.

சிறையிலிருந்து தப்பிய கலியன் நேரே மோகியின் தங்குமிடம் சென்று அவளைக் கண்டான். அவளைக் கொடுஞ்சொற்களால் பலவாறு வசை பாடினான்.

நேர்மை கெட்ட நீலிநீ இருக்கும்
வீடும் வேசை விடுதியா வதுவே
பள்ளியும் வெறிதரும் கள்ளுக் கடையே
புசிக்கும் இடமும் புலால்கடை நாற்றமே.

*(**சுத்தசக்தி காண்டம்**, 15, **மோகி இறுதிப் படலம்** : 53-57)*

இறுதியில் கலியன் அவளைக் கொலை செய்தான்.

அரண்மனைக்குள் புகுந்த கலியன் அவையைக் கூட்டினான். தான் திருந்தியவனாக வந்திருப்பதைக் கூறினான். சுத்தன் யோகசித்தியால் தன்னை மறக்காமல் மறைப்பெனும் மாயையை நீக்கிக் காத்தான்; அமைச்சன் சித்திமானைப் போற்றிப் பாராட்டினான்; தன் தவறுகளுக்கு எல்லாம் மன்னிக்க வேண்டினான். சித்திமானும் கலியன் கூறக் கேட்டு 'இனி நீ கடவுளின் அடியவன், மலைமேல் தவம் இயற்றும் சுத்தன் உன்னை ஏற்பான்' என நல்லுரை கூறினான். சுத்தன் கலியனை ஏற்றுக் கொண்டான்.

2.2.3 கௌரி

▪ அழகு

சாந்த முனிவரின் மகள் பார்வதியின் மகள் கௌரி. மகர யாழ் மீட்டுவதில் வல்லவள். சாந்த முனிவரின் வேண்டுகோளின்படி சுத்தனையும் சித்திமானையும் விருந்தாக ஏற்றுப் போற்றினாள். சுத்தனைக் கண்டதும் அவன் உள்ளத்தைக் கவர்ந்து கொண்டாள். கவியோகி சுத்தானந்தர் கௌரியின் இயல்பினை இவ்வாறு சுவைபடக் கூறுகிறார்:

மங்கலப் புன்னகை மலர்ந்த பொன்முகம்
பங்கய வேல்விழி பவள மூரல்வாய்
பொங்குஇள மயில்குயில் அன்னம் போன்றவள்
புங்கவன் அருளினில் பொலியும் கௌரியே.

*(**சுத்தசக்தி காண்டம்**, 17, **பஞ்சவடிப் படலம்** : 113-116)*

(**பங்கயம்** = தாமரை ; **மூரல்** = முறுவல், புன்னகை ; **புங்கவன்** = முனிவன்)

▪ காதல்

இத்தகு அழகுப் பதுமையாய் விளங்கிய கௌரியைத் தன் பிறந்த நாளில் கண்டு மகிழ்ந்தான் சுத்தன். கவியோகி காதலர் சந்திப்பைத் தமக்கே உரிய பாணியில் பாவாக வடித்துத் தந்துள்ளார்.

பெண்ணொடு பெண்அளாவிப் பெருமைகள் பேசும்சுத்தன்
எண்ணமும் விழியும் உள்ளே இருந்தனன் ; கௌரிவந்தாள்
திண்ணென மின்சா ரத்தீ தெறிப்பது போலுணர்ந்தான்
கண்ணொடு கண்அளாவிக் கருத்துறக் கலந்த தம்மா

(கௌரி காண்டம், 2, சுத்த ஜயந்திப் படலம் : 805-808)

பெண்ணோடு பெண்அளாவி = மகளிர் பேச்செல்லாம் சுத்தனைப் பற்றி இருந்தது என்பது கருத்து. திண்ணென மின்சாரத்தீ = காதல் உணர்ச்சி வேகத்தைக் கவிஞர் இவ்வாறு அற்புதமாகக் கூறியுள்ளார். மேலும் சுத்தனும் கௌரியும்

அவனையே கண்டகௌரி அவனையே எங்கும் கண்டாள் ;
அவளையே கண்டசுத்தன் அவளையே எங்கும் கண்டான்
இவனுக்கே அவள்பிறந்தாள் அவளுக்கே இவன் பிறந்தான்

(கௌரி காண்டம், 2, சுத்த ஜயந்திப் படலம் : 809-811)

என்னுமாறு உள்ளம் ஒன்றினர். காதலர் ஆயினர்.

- **கலைவளம்**

கௌரி பாண்டியர் மரபினில் வந்த பாவை ஆவாள். அறிவும் ஆற்றலும் ஒருங்கே உடையவள்; கற்பின் செல்வி. குண்டலி சக்தியை எழுப்பும் ஆற்றல் உடையவள்; கலைகளின் தாயகமாக விளங்கினாள்.

காவியக் கலையும் ஓவியக் கலையும்
ஆவியை உருக்கும் அமுதயாழ்க் கலையும்
வேதக் கலையும் விரிதமிழ்க் கலையும்
மாதவக் கலையும் மாசறப் பயின்றாள்

(கௌரி காண்டம், 3, கௌரி குலப் படலம் : 263-266)

என்பது சுத்தானந்தர் வாக்கு. இவை மட்டும் அன்றிப் போர்க்கலைப் பயிற்சியும் பெற்றவள். 'சுத்தனுக்கு இவளே சக்தியாவாள்'.

இவ்வாறு கௌரியின் பெருமையும் சுத்தனுக்கு ஏற்ற சுடர்க்கொடி என்று பொருத்தமும் கூறப்பெற்றன.

- **உறுதிமொழி**

கலியன் கேட்டை நீக்கும் தன் பணிக்கு அவள் துணைநிற்க வேண்டும் எனத் தன் உள்ளக் கிடக்கையைச் சுத்தன் உணர்த்தினான். அக்கருத்தை உடன்பட்டுக் கௌரி கூறிய உறுதிமொழி எண்ணத்தக்கது.

உன்மனம் ஒன்றே என்மன மாகும்
ஊடும் பாவும் கூடியே ஆடை
பீடுறும் ஆண்பெண் பிழையறக் கூடி
ஈருட லுக்கும் ஒருயி ராகிப்
பாருள் வளமும் பயிரும் போலே
இகமும் பரமும் இணைந்திட வாழ்வதே
சுகமாம் ; அதுவே சுத்தான்ம வாழ்வாம்.

(கௌரி காண்டம், 5, கௌரி காதற் படலம் : 162-168)

- **திருமணம்**

மன்னன் சத்தியன் தன்மகன் சுத்தன்-கௌரி திருமண ஏற்பாட்டினைச் செய்தான். மணமக்களை,

தவம்பெற்ற தவமணி சாந்த கௌரியும்
சிவம்பெற்ற சுத்தனும் திகழ்கநீடு என்றார்

(கௌரி காண்டம், 8, ஊர்மகிழ் படலம் : 263-266)

என்று மன்னரும் மக்களும் வாழ்த்தினர்.

▪ இல்லறம்

ஆன்றோர் கூறிய அறிவுரையின்படி கௌரி-சுத்தன் இல்லறம் அமைந்தது. அவர்கள் வாழ்க்கை 'பண்ணுடன் பனுவல் போலே, சத்தியும் சிவனும் போலே' அமைந்தது.

(**பனுவல்** = நூல், பாட்டு)

▪ வாழ்க்கைத் துணை

கலியன் சித்தியைக் கைப்பற்றும் கருத்துடன் சூழ்ச்சிகள் பல செய்தான். கலிநகர் வீரர்களைப் பல இடங்களிலும் ஊடுருவச் செய்தான். கலியனின் சூழ்ச்சியைச் சத்தியனும் சுத்தனும் சித்திமானும் முறியடித்தனர்.

கௌரி கணவனிடத்து அன்பும் மதிப்பும் நாட்டுப் பற்றும் உடையவள். கலியனின், கொடுமையைக் கட்டுடன் அழிக்கச் சுத்தன் புறப்பட்டான். தானும் அவனோடு போர்க்களம் செல்லக் கௌரி ஆயத்தமானாள். அவள் உள்ளம்

நாதா, யாதும் தீதுவ ராமல்
யானும் உம்முடன் இருந்துபோர்க் களத்தில்
உதவி செய்க உவந்தே யருள்க

(கௌரி காண்டம், 32, போரணிந்த படலம் : 46-48)

என்பதால் விளங்குகிறது.

கணவனை விட்டுப் பிரியத் தயங்கினாள் கௌரி. அவனிடத்து அவள் கொண்டுள்ள அன்பினைக் கீழ்க் காணுமாறு வெளிப்படுத்தினாள்:

ஞானச் சுடரே, நானுன் பாதி
பிறந்தும் பிரியேன் இறந்தும் பிரியேன் ;
வீட்டிலும் பிரியேன் ; காட்டிலும் பிரியேன்
நாட்டிலும் பிரியேன் ஞாலத் துயிரே

(கௌரி காண்டம், 32, போரணிந்தப் படலம் : 68-71)

(**ஞாலம்** = உலகம்)

கணவனின் அன்பிற்கு இனியவள். அவன் பாராட்டிற்கு உரியவளாகக் கௌரி திகழ்ந்தாள். அழகாலும் பண்பாலும் அறிவாலும் ஒழுக்கத்தாலும் யோகத்தாலும் உயர்ந்து விளங்கினாள் கௌரி எனச் சுத்தன் பாராட்டியதால் அவளின் ஒப்பற்ற தன்மை புலப்படுகிறது.

கௌரி தன் எண்ணத்தாலும் உயர்ந்து விளங்கினாள். பகை சினம் தவிர்த்து உலகில் அன்பும் அறமும் ஆன்மநேயமும் தழைத்திட விரும்பினாள். போர் இல்லா உலகம் அமைய விரும்பினாள்.

ஓர்குல மாகப் பாரெலாம் வாழ்ந்தால்
போரெனும் பேச்சே வாரா தொழியும்

வெளிவே டங்களும் விதவித மதங்களும்
மண்பொன் வெறியும் மனத்தின் விகாரமும்
உள்ள மட்டிலும் உலகம் கலகமே

(கௌரி காண்டம், 34, உறுதிப் படலம் : 102-106)

▪ தன்னுயிர் நீத்தாள்

போர்க்களத்தில் கணவனுக்குத் தீங்கு நேராமல் காக்கப் போர் வீரனாகப் போர்க்கோலம் பூண்டு அவனைத் தொடர்ந்தாள் கௌரி. பகைவரின் படுகுழியிலிருந்து கணவனைக் காத்தாள். அச்செயலில் தன் உயிரையும் துறந்தாள். சுத்தன் அவள் இழப்பைத் தாங்கொண்ணாமல் கதறினான்.

என்னுயிர்க்கு உயிரே ஆனாய் என்விழி மணியே ஆனாய்
இன்னுயிர்த் துணைவி யானாய் இறுதிமூச்சு எனக்கே ஈந்தாய்
மன்னுயிர் உள்ள மட்டும் வான்நிலம் உள்ள மட்டும்
அன்னையின் அன்பு மிக்காய் ஆருனை மறப்பார் ஈங்கே

(கௌரி காண்டம், 35, இறுதிப் படலம் : 108-111)

2.2.4 சக்தி

▪ சக்தி தோற்றம்

கௌரியின் மறுவடிவம் சக்தி. சுத்தனைச் சற்றும் பிரிய எண்ணாத கௌரி சக்தி என்னும் பெயரில் அரக்கர் நாட்டில் பிறந்தாள். சாந்தமுனிவர் இதனை,

சக்திபெற் றெழுந்தது தான வத்திலே
உத்தம நின்பணிக் குதவி ஆகவே

(சாதன காண்டம், 1, கருணைப் படலம் : 123-124)

என முன்னறிவிப்பாக வெளியிட்டார்.

சக்தி சீகரன் மகள் சுந்தரிக்கும் அரக்கன் மாவலிக்கும் பிறந்தவள். மாவலி சுந்தரியைச் சீகரனிடமிருந்து கடத்திவந்து மணந்து கொண்டான். அத்தகைய அரக்கனின் மகள் சக்தி என்றாலும், அவள் கவியோகி சொல்வது போல்

செருகுல வாணர் நாப்பண் சேற்றினில் பூவைப் போல
வருகுல மணியாம் சக்தி வாய்மையும் தூய கற்பும்
கருவிலே திருவும் கொண்ட கன்னிகை ஆனாள்.

(தானவ காண்டம், 6, மாவலி எழுந்த படலம் : 89-91)

(**செருகுல வாணர்** = போரையே வாழ்வாகக் கொண்ட அரக்கர்கள் ; **கருவிலே** = பிறப்பிலேயே)

மேலும் அவள் புகையற்ற தீப்போலப் பொலிவுடன் திகழ்ந்தாள். முழுநிலவு போன்ற முகத்தாள்; பாலைவனத்தின் இடையே அமைந்த சோலை போன்றவள். புன்னகை முத்துகளை உதிர்க்கும் அமுதச்செல்வி. அன்புத் தேனால் ஆன செம்பொன் கொடி போன்றவள். போகனையும் சத்தியனையும் முதன்முதலில் காணும்போதே ‘வணக்கம் ஓம்’ எனக் கூறி வணங்கினாள். தன் உள்ளே கௌரியின் உயிர் கலந்தது என்னும் மெய் உணர்வை,

தண்ணருள் சோதி யாகத் தவத்தணல் வீசி என்னுள்
பெண்ணுயிர் புகுந்து கௌரி எனப் பெயர் பேசிற்று.

(தானவ காண்டம்,12 , சக்தி விருப்பப் படலம் : 71-72)

(**தன்னருள் சோதி** = அருள் ஒளி ; **தவத்தணல்** = தவமாகிய தணல் - உருவகம்; **தணல்** = தீ)

அவள், சுத்தன் தன் சித்தத்தின் உள்ளே புகுந்தான் என்றும் தானும் அவனும் 'கிரணமும் சுடரும் போலப்' பிரிவற்ற நேயம் பூண்டதாகவும் கூறினாள்.

- **இசைப் பயிற்சி**

போகனிடம் குழலும் யாழும் பயில மாவலி தன் மகள் சக்தியை அனுமதித்ததை நோக்கத் தந்தையின் வாஞ்சைக்குரிய மகள் அவள் என்பதை அறியலாம். சத்தியன் குழலும் யாழும் அவளுக்குக் கற்பித்தான்.

- **கலைக் கோயில்**

மாவலி தன் மகளின் விருப்பத்திற்கு இணங்க இசை, கூத்து, நாடகம், அரிய சிற்பம் இவற்றைப் பயிலுவதற்காக ஒரு கலைக்கோயிலையும் உருவாக்கினான். அக்கலைக் கோயிலில் சக்தி பாடிய பாடலைக் கேட்டுத் தானவர் தீய பண்புகள் மாறி, பரம்பொருள் ஒன்றென அறிந்தனர். பாட்டிற்கு ஏற்ப நடனம் ஆடும் திறனையும் சக்தி பெற்றாள். சன்மார்க்கக் கலைச் சங்கம் அமைவதற்குச் சக்தி துணை நின்றாள். அதன் வளர்ச்சிக்கு நிதி உதவியும் செய்தாள்.

- **துணிச்சல்**

தானவ நாடு மெல்ல மெல்ல ஆன்மீகத் துறையில் நுழைவதையும் மங்கையும் மதுவும் துறக்கப்படுவதையும் அறிந்த மாவலி இதற்குக் காரணமான சத்தியனையும் போகனையும் சக்தியையும் சுட்டழிக்க ஆணை பிறப்பித்தான். மூவரும் அஞ்சாது இறையுணர்வில் ஈடுபட்டனர். சக்தி மிகத் துணிச்சலோடு தன் தந்தை மாவலியைத் தடுத்துக் 'குடிவெறியால் கொடுமை செய்திடத் துணிந்தாய். சுடவேண்டும் என்றால் முதலில் என்னைச் சுடு' என்று நின்றாள்.

போகத்தையும் போதையையும் தவிர்த்து ஆணும் பெண்ணும் பிரமசரியம் காத்துக் காமம் கடந்து சமயோக நேயம் பூண்டு வாழ வேண்டும் எனச் சக்தி வற்புறுத்தினாள். சிறைப்பட்டாலும் குண்டடிபட்டாலும் ஊர் தோறும் சென்று தொண்டு செய்யவேண்டும் என ஆன்ம நேயர்களை ஊக்குவித்தாள்.

தன் தந்தை மாவலி அடாத செய்த போது சக்தி எதிர்த்து நின்றாள். தொண்டர்கள் கள்ளுக் கடை மறியலில் ஈடுபட்டபோது மாவலி கள்குடிச் சட்டம் போட்டான். பெண்ணின்பத்தை வெறுத்தோரை இழிவுபடுத்தினான். சத்தியனையும் போகனையும் சுந்தரியையும் மெய்த்தொண்டர்களையும் சிறைப்படுத்தினான். இத்தகு நிலைமையை அறிந்த சக்தி அவர்களை விடுதலை செய்ய வேண்டும். அவ்வாறு செய்யவில்லை ஆனால் உண்ணா நோன்பு இருந்து உயிர் துறப்பேன் என வெகுண்டாள். சொல்லியபடியே உண்ணாநோன்பு இருந்தாள். மக்கள் மாவலியைத் தூற்றினர். மாவலி மனம் மாறவில்லை. மாறாகப் பீரங்கியால் அவளைச் சுட்டுத் தீர்த்திட ஆணையிட்டான். தானவர்கள் ஆணையை

நிறைவேற்றத் தயங்கினர். சுத்தனை மனத்தில் நிறுத்திப் போற்றினாள் சக்தி. மக்கள் வீறுகொண்டு எழுந்தனர். திடீர் என வானில் மின்னலிட்ட விமானங்களிலிருந்து குண்டுகள் விழுந்தன. தொண்டர்கள் சிறையைத் தகர்த்து அனைவரையும் விடுவித்தனர். சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட போகனும் சத்தியனும் சுந்தரியும் சக்தியோடு விமானம் ஏறிச் சீகர நாட்டை அடைந்தனர்.

• தொண்டு

தூய தொண்டு வாழ்வையே தன் வாழ்வாகக் கொண்டு வாழ்ந்தவள் சக்தி. சுத்தனை எப்போதும் தன் உள்ளத்தில் கொண்டு அவன் வழியில் உலக உயர்விற்கும் பாடுபட்டாள்; சீல வாழ்க்கையும் செவ்விய சிந்தையும் கொண்டாள்.

அண்ணல் சுத்தனுக்கு அன்பை அளித்தவள்
கண்ணு லகைஅவனெனக் காண்பவள்
கண்ணும் சோறும் அவனென்று உணர்பவள்
எண்ணம் எண்ணாம் எலாம்அவன் எண்ணமே

(சுத்த சக்தி காண்டம், 3, திருத்தொண்டர் படலம் : 231-234)

சாதி வேற்றுமையின்றி, சமய வேற்றுமையின்றி, மக்கள் அனைவரும் அடிமைத் தளையைக் களைந்து உரிமை பெற்று வாழ வேண்டும். இறை உணர்வுடன், தன்னலம் மறந்து வாழ வேண்டும் எனச் சக்தி உழைத்தாள்.

மாவலியும் கலியும் தவறுணர்ந்து மனம் திருந்தி வாழச் சக்தி துணை நின்றாள்.

2.2.5 மாவலி

• மாவலி தோற்றம்

மாவலி அரக்கர் குலத் தோன்றல். ஆதி போகனுக்கும் இருள் மாயைக்கும் பிறந்த தானவர் மரபிலே வந்தவன்; இவன் தந்தை சிங்கன்; தாய் கமலி. மாவலியுடன் பிறந்தவர்கள் அனலன் என்னும் தம்பியும், மோகி என்னும் தங்கையும் ஆவர். அனலன் தன் அண்ணனுக்கு எதிரியாக ஆனான். மோகி சத்தியனின் தம்பி கலியனை மணந்தாள். அவனும் தன் அண்ணன் சத்தியனுக்கு எதிராகச் செயல்பட்டான். மாவலியின் அன்பிற்கு இலக்கானான்.

• பேராசை

பொதுவாக, அரக்கர்க்கு உரிய இயல்புகள் அனைத்திற்கும் உரியவன் மாவலி. அனைத்தையும் தனது என்னும் பேராசை கொண்டவன்.

எனதுடல், எனதுயிர், எனது செல்வமே
எனதுலகு, எனதுவிண், எனது போகமே
எனதுஇசை, எனதுஅறிவு எனது கட்டளை
எனதுஎனது எனும்அவர் இழிபொ றாமையே

(தானவ காண்டம், 6, மாவலி எழுந்த படலம் : 253-56)

(**விண்** = ஆகாயம் ; **போகம்** = இன்பம் ; **இசை** = புகழ்)

• இராக்கத மணம்

காம வெப்பம் கரை கடந்திடச் சீகர மன்னன் மகள் சுந்தரியை மாவலி கடத்தி வந்து திருமணம் புரிந்து கொண்டான். அவள் இணக்கமின்றி அவள் கற்பையும் சூறையாடினான். மாவலியின் ஆட்சியில் அரக்கர்கள் பகலில் உறங்கி இரவில் காமவேட்டையாடுவதில் கைதேர்ந்தவர்கள்.

தானவ நாட்டில் எவ்விடத்தும் கள்ளும் ஊனும் குருதியும் நாறின; பொன்னையும் போக போக்கியங்களையும் பெண்களையும் அரக்கர்கள் நாடித் திரிந்தனர்.

• நாத்திகன்

மாவலி கடவுள் மறுப்பாளன்; நாத்திகன். கடவுள் என்ற சொல்லையும் கேட்க விரும்பாதவன். ஏசுவின் புகழ்பாடும் 'கடவுள் ஆட்சி கதிர் விட்டு ஒளிர' என்ற அடியைக் கேட்டுச் சினந்தான்.

கடவுளும் கிடவுளும் கலந்துஎன் காதினைக்
குடைந்திடின் அவர்களைக் கொன்று போடுவேன்
திடமுறு லூஸிஃபர் செருக்கைப் பாடினால்
அடைகுவர் மதிப்பு

(தானவ காண்டம், 8, மாவலி எழுந்த படலம் : 113-116)

லூஸிஃபர் - பிதா (இறைவன்)வை எதிர்த்தவன் பிதாவால் சபிக்கப்பட்டவன் என்பதால் அவன் நாத்திகன் என்பதை அறியலாம்.

• காமமிகு கணவன்

மாவலி முரடன். ஆயினும் தன் மனைவி சுந்தரியிடம் ஆழ்ந்த காமமுடையவன். அவள் புன்னகை மந்திரத்தில் கட்டுண்டு கிடந்தான்.

சுந்தரி வந்துஒரு சுடரும் மென்னகை
அந்தமாய் அவனுளம் அழிய வீசினாள்

(தானவ காண்டம், 8, மாவலி இசைந்த படலம் : 91-92)

(**அந்தமாய்** = அழகாய்)

சுந்தரியின் சொல்கேட்டுப் போகனையும் சத்தியனையும் மாவலி விடுதலை செய்தான்.

• பிற மகளிர் உறவு

அழகிய மனைவி சுந்தரி இருந்தும் மாவலி பிற மகளிரோடும் காமக் களியாட்டங்களில் ஈடுபட்டான். சுந்தரி அவன் செயலைக் கடிந்தாள். அவனை 'இனி ஒருக்காலும் தீண்டேன்' என்று விரதம் பூண்டாள். மாவலி அவள் இருக்க ஒரு மனையும், உண்ண இருவேளை உணவும் அளித்தான். மனைவியைப் புறக்கணித்து வாழும் அவன் கொடுமனம் இதனால் தெளிவாகிறது.

• மகளிடம் அன்பு பாராட்டல்

மகள் சக்தியிடத்து அளப்பரிய அன்புடையவன். அவள் போகனிடத்தும் சத்தியனிடத்தும் இசை பயில மாவலி அனுமதி வழங்கினான்.

பூமுகச் செல்வி யேநீ
இங்குவந்து இருக்கும் இந்த எளியநல் இசைவா ணர்கள்

எம்குணம் அறிந்து வாழு மட்டும்மென் இசையை மீட்டாய்
மங்கலம் உனக்கு உண்டு.

(தானவ காண்டம், 12, சக்தி விருப்பப் படலம் : 145-148)

என்று மாவலி அனுமதியும் ஆசியும் வழங்கினான்.

சக்தி யாழ் மீட்டி இசைத்த 'திராய்ப் போர்ப் பாட்டினைக் கேட்ட மாவலி' அதில் உள்ளம் தோய்ந்தான். தன் மகளைப் பாராட்டினான்.

மதுரக்கீதம் மாந்திய மயக்கில் என்சேயே
நலம்பெறு நாதசக்தி நயத்தினை இன்றுகண்டேன்
இவளவு கற்றநீஉன் இச்சைஒன்று இயம்பாய்

(தானவ காண்டம், 15, யாழிசைப் படலம் : 138-140)

என்று பாராட்டி அவள் விருப்பம் ஒன்றையும் கேட்டான். சக்தி இசையையும் மற்ற கலைகளையும் இந்த நாட்டு மக்கள் எளிதில் கற்றிடக் கலைக்கோயில் ஒன்றைத் தன் தந்தை அமைத்துத் தரவேண்டுமெனக் கேட்டாள். அவள் கருத்திற்கேற்ப, கலைக்கோயில் ஒன்றையும் அழகுற அமைத்துத் தந்தான்.

இதனால் மாவலி தன் மகளிடம் கொண்ட அன்பும் இசையின்பால் அவன் கொண்ட ஆர்வமும் அறியலாம்.

- **மாவலி கொடுமை**

தன் கொள்கைக்கும் பகுத்தறிவிற்கும் மாறாகக் கடவுளின் பெயராலும் கலைகளின் பெயராலும் அரக்கர்கள் மனந்திருந்தி வாழ்வதை அறிந்து மாவலி மனம் கொதித்தான். போகனும் சத்தியனும், சுந்தரியும், சக்தியும், சன்மார்க்கத் தொண்டர்களும் தனக்கு எதிராகச் செயல்படுவதை அவனால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

இந்திரர்க்கும் கிடைத்திடாச் சித்திராங்கிகளின் ஆட்டமும் பாட்டமும் காமுகர் களியாட்டங்களும், ஊனும் கள்ளும் ஒழியாது உண்டு மயங்கலும் போதை தலைக்கேறி விரசமாய்ப் பாடலும் தானவத்தின் தனிவாழ்க்கை ஆகும். இன்னும் சொன்னால் ஆணும் பெண்ணும் அறிவிழந்தனர்; நெறி பிறழ்ந்தனர். இப்படி எல்லாம் இருந்த தானவ நாடு கலைக்கோயில் திருப்பணியாலும் அன்பர்களின் முயற்சியாலும் படிப்படியாகத் திருந்தியது. இவ்வாறு திருந்தியதை அறிந்த மாவலி இம்மாற்றங்களுக்கு எல்லாம் காரணமானவர்களைச் சுட்டொழிக்கத் துணிந்தான். போகன், சத்தியன், சுந்தரி ஆகியோரைச் சிறையில் இட்டான். தந்தையின் அடாச்செயலைக் கண்டு அதனைச் சக்தி எதிர்த்தாள். உண்ணாநோன்பு மேற்கொண்டாள். மாவலியின் அடக்குமுறைக்கு எதிராக மக்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். மக்களுக்கு உதவியாக விமானங்கள் குண்டு மழை பொழிந்தன. சிறைச்சாலை உடைக்கப்பட்டது. சிறைக்காவலர் செய்வது அறியாது திகைத்தனர். போகனும் சத்தியனும் சுந்தரியும் சக்தியும் விமானம் ஏறிச் சீகரம் சென்றனர். மாவலியின் எண்ணம், ஆணவம், அகங்காரம் தூள் தூள் ஆயிற்று.

- **அறிவியல் வளர்ச்சி**

தானவ நாடு அறிவியல் முன்னேற்றம் கண்ட நாடு. குண்டுகள், கண்ணிகள், நச்சுப் புகை, சூத்திரப் படகுகள், விமானங்கள், கரி, இரும்பு, எண்ணெய், மின்சாரம், வானொலி இவ்வளவு இருந்தும் மாவலியால் வெற்றி பெற இயலவில்லை. ஆயுத ஆற்றலைவிட ஆன்மிக ஆற்றல் மிக்க வலிமை வாய்ந்தது என்பதை மாவலி ஏற்கவில்லை.

தன் தோல்விக்கெல்லாம் தன் தம்பி அனலன்தான் காரணம் என்று மாவலி எண்ணினான். 'அனலனின் ஆணவபுரியை அசுர பீரங்கிகள் வைத்துத் தகர்ப்பேன்; காஸ்மிக் கதிர்களைக் கக்குவேன்; இங்கே விசையை இப்படி அழுத்தினால் அங்கே அனல் பற்றி எரியும்; குண்டுகள் பொழிவேன்; காந்த வெடிகளால் கப்பலை உடைப்பேன்; அறிவியல் கருவிகளை அழிவிற்குப் பயன்படுத்துவேன்' என்று முழங்கினான்.

• உறவு முரிந்தது

வக்கிரன் சொல்லைக் கேட்டுத் தன்னால் உயர்ந்த கலியனையும் மோகியையும் சிறைப்படுத்த ஆணை இட்டான். தூமகேது கலியனைச் சிறைக்கு அனுப்பிவிட்டு மோகியைத் தான் கைப்பற்றிக் கொண்டான். இறுதியில் அவளும் கலியனால் கொல்லப்பட்டாள்.

• மாவலியும் அனலனும்

தானவ மன்னன் மாவலியும் ஆணவ மன்னன் அனலனும் உடன்பிறப்பினராயினும் ஒருவரை ஒருவர் மாய்த்து ஒழிப்பதிலேயே செருக்குற்று இருந்தனர். இருவரும் அழிவு தரும் படைக்கருவிகளைப் படைத்துக் கொண்டு போரில் அவற்றைப் பயன்படுத்தினர். உறவை மறந்து உறுபகையால் மோதிக் கொண்டனர். அறிவிலும் ஆற்றலிலும் சிறந்த தம்பி, நெப்போலியனைப் போல, அணுகுண்டு வெறிபிடித்த இட்லரைப் போல, மூர்க்கமாய்ப் போர் செய்கின்றானே என்று பதறினான் மாவலி. அனலன் சினந்து கோபால்ட் குண்டை வீசினான்; வெடிகளை வீசினான். இரு தரப்புப் படைகளும் மோதிக் கொண்டன.

ஆயிரம் கப்பல் செல்லும் ஆயிரம் கப்பல் வீழும்
ஆயிரம் படைகள் ஏகும் ஆயிரம் படைகள் சாகும்
ஆயிரம் பொறிகள் முட்டும் ஆயிரம் பொறிகள் வெட்டும்
ஆயிரம் ஆயுதங்கள் அனற்பட்ட பஞ்சு மாமே

(சுத்த சக்திக் காண்டம், 17, அணுப்போர்ப் படலம் : 51-54)

(**பொறிகள்** = போர் இயந்திரங்கள்)

எங்கும் பிணக்குவியல்கள். ஊர்கள் மண்ணாயின. கோயில்கள் இருந்த இடம் தெரியாமல் அழிந்தன. பல்லாண்டுகளாகச் சேர்த்த படைகள் அழிந்தன. அண்ணனும் தம்பியும் போரிட்டனர். ஒருவர் கையை ஒருவர் வெட்டப் பாய்ந்தனர். இறுதியில் அனலன் தலை துண்டிக்கப்பட்டு இறந்தான். 'ஆள்வன்இவ் ஆணவத்தை அவுணன் யான்' என்று முழங்கிய மாவலியை நோக்கிக் குண்டுகள். உயிருக்கு அஞ்சி, 'தப்பினேன், பிழைத்தேன்' என்று ஓடினான் மாவலி. சுந்தரி விடுத்த கடிதம் எரி நெருப்பில் எண்ணெய் வார்த்தது போலாயிற்று. அவனிடம்

கொண்ட இரக்கத்தால் அவள் எழுதிய கடிதத்தில், 'உன்னுயிரும் மன்னுயிரும் வேறில்லை. உயிருக்குயிராய் ஒருபொருள் உள்ளது. அதுவே பரம்பொருள். அன்பும் அருளும் மேற்கொண்டு உலகில் அழகாய் வாழலாம். போரால் நாடுகள் சுடுகாடுகள் ஆயின. பசுவள நாடு பாலையாயிற்று. மக்கள் பசியாலும் பட்டினியாலும் வாடுகின்றனர். மானமிழந்து மக்கள் வாழ்கின்றனர். இந்நிலை தீரச் சங்கத் தொண்டர்கள் கூடி அருள் குடியரசை அமைத்துள்ளோம். அதில் இணைந்து புகழ்பெறுவாய்' என்று தன் உள்ளத்தை வெளிப்படுத்தினாள். கடிதத்தைக் கண்டதும் அவளைக் கொல்லவே துணிந்தான் மாவலி. மீண்டும் குண்டுகள் விழுந்தன. இனி உயிர் பிழைப்பது தவிர வேறொன்றும் இல்லை என எண்ணிச் சீகரம் சேர்ந்தான். சீகரன் அவனை வரவேற்று அவனுக்கு நன்மைகள் கூறித் திருத்தினான். அவனும் சுத்தனுக்குச் சேவை செய்ய முன்வந்தான்.

https://tamil.wiki/wiki/%E0%AE%9A%E0%AF%81%E0%AE%A4%E0%AF%8D%E0%AE%A4%E0%AE%BE%E0%AE%A9%E0%AE%A8%E0%AF%8D%E0%AE%A4_%E0%AE%AA%E0%AE%BE%E0%AE%B0%E0%AE%A4%E0%AE%BF



வரது இணையதளம்

https://www.kaviyogi.in/index.html

ஆசிரியர்:சுத்தானந்த பாரதியார்

https://ta.wikisource.org/wiki/%E0%AE%86%E0%AE%9A%E0%AE%BF%E0%AE%B0%E0%AE%BF%E0%AE%AF%E0%AE%B0%E0%AF%8D:%E0%AE%9A%E0%AF%81%E0%AE%A4%E0%AF%8D%E0%AE%A4%E0%AE%BE%E0%AE%A9%E0%AE%A8%E0%AF%8D%E0%AE%A4_%E0%AE%AA%E0%AE%BE%E0%AE%B0%E0%AE%A4%E0%AE%BF%E0%AE%AF%E0%AE%BE%E0%AE%B0%E0%AF%8D

சுத்தானந்த பாரதியார் என்பவர் கவியோகி, மகரிஷி என்று போற்றப்பட்டவர் ஆவார். இவர் கவிதைகள், தமிழிசைப் பாடல்கள், உரைநடை நூல்கள், மேடை நாடகங்கள் எனப் பல நூல்களை இயற்றியவராவார்.

அரசியல்

சுத்தானந்த பாரதி மதுரை பசுமலை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் படிக்கும் காலத்திலேயே வ.உ.சிதம்பரம் பிள்ளை, ஜி.சுப்பிரமணிய ஐயர், சுப்ரமணிய சிவா ஆகியோருடன் நட்பு ஏற்பட்டது. அதன் வழியாக சுத்தானந்த பாரதி இந்திய நாட்டு விடுதலையில் ஈடுபாடு கொண்டார். திருச்சியில் காங்கிரஸ் ஆபீசுக்குச் சென்று அங்கிருந்த கல்கி , தி.சே.சௌ.ராஜன் ஆகியோருடன் அறிமுகம் செய்துகொண்டார். நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை யுடன் அணுக்கமானார். திருச்சியில் காந்தியைச் சந்தித்தார். அது முதல் இறுதிக்காலம் வரை தீவிர காந்தியராகவே திகழ்ந்தார்.

சுத்தானந்த பாரதி வ.வே. சுப்ரமணிய ஐயர் நடத்திய பாரத்வாஜ ஆசிரமத்தில் சேர்ந்து அங்கேயே ஆசிரியராகப் பணியாற்றினார். 1917-ல் திலகர், விபின் சந்திரர், தாகூர், மகாத்மா எனப் பலரைச் சந்தித்தார். 1918-1920-ல் தேசவிடுதலைப் பிரச்சாரத்துக்காக நாடெங்கும் சுற்றியலைந்தபோது சுபாஷ் சந்திரபோசைச் சந்தித்தார். அதனால் பிரிட்டிஷ் அரசின் கண்காணிப்புக்கு ஆளானார்.

சுத்தானந்த பாரதி தன் சுயசரிதையில் அவர் ஊர் ஊராக அலைந்து ஒவ்வொரு கிராமத்திலும் தன் பாடல்களையும் சி.சுப்ரமணிய பாரதியார் பாடல்களையும் பாடியும் சொற்பொழிவாற்றியும் தேசவிடுதலைக் கருத்துக்களைப் பரப்பியதை விரிவாகப் பதிவுசெய்திருக்கிறார். ஒவ்வொரு ஊரிலும் உள்ள தேசியப்போராட்ட ஆர்வலர்களின் பெயர்களையும் குறிப்பிடுகிறார். தேசவிடுதலைக்காக நன்கொடை வசூல் செய்து அதை காந்திக்கு அனுப்பிக்கொண்டிருந்தார்.

தேசவிடுதலை நோக்குடன் சுத்தானந்த பாரதி ஏராளமாக எழுதியிருக்கிறார். அவர் எழுதிய நூல்களில் 'தமிழர் புரட்சி', 'சுதந்திரக்கனல்', 'வீரத்தேவன்' ஆகியன வெள்ளையருக்கு எதிராக இந்தியர்கள் நடத்திய போராட்டத்தின் சரித்திரத்தைப் பின்னணியாகக் கொண்டவை. கிழக்கிந்திய கம்பெனி ஆட்சியை எதிர்த்த மருது சகோதரர்களின் வாழ்க்கையின் அடிப்படையில் எழுதப்பட்ட கதை 'தமிழர் புரட்சி'.

ஆங்கிலம், பிரெஞ்சு, இத்தாலியன், இந்தி, தெலுங்கு சமஸ்கிருதம் ஆகிய மொழிகள் அறிந்தவர். 1928-1930-ம் ஆண்டுகளில் தேசவிடுதலைப்போரில் கலந்துகொள்வதற்காக இந்தியா முழுக்கச் சுற்றினார். சுதந்திரம் கிடைக்கும் வரை பாண்டிச்சேரி அரவிந்தர்

ஆசிரமத்தில் ஏறத்தாழ 20 ஆண்டுகள் மவுன விரதம் காத்தபோது மனதில் தோன்றிய கவிதைநூல் 'பாரதசக்தி காவியம்'. நாட்டுப் பற்று, மதுவிலக்கு, தீண்டாமை போன்றவற்றை அவரது நாடகங்களும் சிறுகதைகளும் வற்புறுத்தியன.

சுத்தானந்த பாரதியார்
https://sites.google.com/site/rsrfaces/home/cuttananta-paratiyar

இவர் சந்தித்தப் பெரியோர்கள் அனேகர். அவர்கள் மகாத்மா காந்தி, பாரதியார், வ.வெ.சு.ஐயர், அரவிந்தர், திலகர், வ.உ.சி., கல்கி இப்படிப் பற்பல பெயர்களைச் சொல்லிக்கொண்டே போகலாம். ஆன்மீகத் தூண்களான ஷீரடி பாபா, ரமண மகரிஷி, சேஷாத்ரி சுவாமிகள், அரவிந்த அன்னை, ஞானானந்தகிரி சுவாமிகள் ஆகியோரின் தொடர்பும் இவருக்கு இருந்தது.

இவர் புதுச்சேரி சென்று வ.வெ.சு.ஐயரையும் பாரதியாரையும் பார்த்தார். பாரதி இவருடைய "பாரதசக்தி" நூலைப் பாராட்டி "தமிழுக்கு ஒரு மகாகாவியம் விளங்கட்டும், செய் பாண்டியா, பராசக்தி உனக்கு நல்ல வாக்குத் தருவாள்" என்று ஆசிர்வாதித்தார். பாரதியைப் போற்றி இவர் எழுதிய வெண்பா:-

"வீரங் கனலும் விழிக்கனலும், பிள்ளைபோல்

ஈரந் திகழும் இளநெஞ்சும் - பாரதியின்

சொல்லும் பொருளும் சுதந்திரப் பேரிகையும்

வெல்லும் புவியை விரைந்து".

இவருக்கு சுதந்திர வேட்கை பிறந்தது. திருச்சியில் அப்போது இருந்த காங்கிரஸ் ஆபீசுக்குச் சென்றார். அங்கு கல்கியின் அறிமுகமும், டாக்டர் டி.எஸ்.எஸ்.ராஜனின் அறிமுகமும் கிடைத்தது. அங்குதான் இவர் காந்திஜியைச் சந்தித்துப் பேசினார். அவர் அழைப்பை ஏற்று காங்கிரஸ் பிரச்சாரப் பணியில் இறங்கினார். சுத்தானந்தர் கரூரில் அரசியல் கூட்டங்களில் பேசினார். அங்கு கள்ளுக்கடை மறியலில் கலந்து கொண்டார். கரூர் காங்கிரஸ் கமிட்டித் தலைவராக இருந்த நாமக்கல் ராமலிங்கம் பிள்ளையோடு தொடர்பு ஏற்பட்டது.

பொது சேவையில் ஈடுபட்டிருந்த சமயம் வ.வெ.சு.ஐயரிடமிருந்து இவருக்கு ஒரு கடிதம் வந்தது. இவரை அவரது பரத்வாஜ ஆசிரமத்துக்கு

வரசோல்லி. இவரும் காத்துக் கொண்டிருந்தார். ஆனால் இவர் வீட்டில் எதிர்ப்பு இருந்தது. வ.வெ.சு.ஐயர் ஒரு புரட்சிக்காரர். அவரோடு போய் இவர் சேருவதை குடும்பத்தார் விரும்பவில்லை. அது குறித்து இவர் எழுதியிருப்பதைப் பாருங்கள்:-

"சில நண்பர்களைக் கொண்டு எனக்கு வீட்டில் புத்தி சொல்லச் சொன்னார்கள். ஒருவர் கண்டபடி திட்டினார். நான் மௌனமாக பொறுத்துக் கொண்டு என் வேலையைப் பார்த்தேன். உலகுக்கெல்லாம் பதில் சொல்லிக்கொண்டிருந்தால் கழுதை விற்ற கந்தப்பன் கதைதான். அனைவரும் என்னை பைத்தியம் என்றனர். அது சரிதான் என்று நிரூபிப்பது போல நான் எனது தலைப்பாகையைக் கழற்றி எறிந்தேன். என் உடைமைகள், உடைகள் அனைத்தையும் தீயிட்டு எரித்தேன். நான் எழுதிய கையெழுத்துப் பிரதிகளில் "பாரத சக்தி"யை மட்டும் வைத்துக் கொண்டு மற்ற நாவல்கள், நாடகங்கள் அனைத்தையும் தீயிட்டு எரித்தேன்."

அப்போது ராமேஸ்வரத்தில் நடந்த காங்கிரஸ் மகாநாட்டுக்கு இவர் சென்றார். அங்கு ந.சோமையாஜுலு, ஸ்ரீனிவாசவரதன் ஆகியோரை சந்தித்தார். அங்கு மாநாடு முடிந்ததும் தனுஷ்கோடி, மதுரை போய்விட்டு சேரன்மாதேவிக்குப் போனார். அங்கு வ.வெ.சு.ஐயர் இவரை வரவேற்றார்.

தியாகச்சுடர், மாவீரன் வ.வெ.சு.ஐயரிடம் இவருக்கு நல்ல பழக்கம் உண்டு. திருநெல்வேலி மாவட்டம் சேரன்மாதேவியில் ஐயர் நிறுவிய பரத்வாஜ் ஆசிரமத்திலும், அவரது பத்திரிகையான 'பாலபாரதி'யிலும் சுத்தானந்தருக்கு தொடர்பு உண்டு. இவரது தமிழார்வத்தையும், கவிதைத் திறத்தையும் ஐயர் வெகுவாக புகழ்ந்திருக்கிறார். ஐயர் மீது இவருக்கு இருந்த அன்பை விளக்க இவர் ஐயருக்கு எழுதிய கடிதமொன்றில் இவரது வாசகத்தைப் பார்க்கலாம். அதில் இவர் ஐயரை, "வீரவிளக்கே! விக்ரமச் சிங்கமே! வ.வெ.சுப்பிரமணிய தீரனே! தீப்பொறி சிந்தும் சிங்கம் போல பாரத தேவியின் துயர் தீர்க்க வீறுகொண்டெழுந்த வித்தகனே! என்றெல்லாம் போற்றியிருக்கிறார்.

ஐயரை இவர் வர்ணிப்பதைப் பார்க்கலாம்:

"சிங்க முகம், நீலமணிக் குன்று போல் திண்ணுடல்; புதிய வைரம்போல் உறுதியான அங்கங்கள்; கர்லாவும் பஸ்கியும் செய்து இறுகிய தசைகள்; செவ்வரி படர்ந்த கூர்விழிகள்; அடர்ந்த தாடி; வகுடெடுத்துஒழுங்காகச் சீவி விட்ட கேசம். அகன்ற மார்பு, பஞ்சகச்ச வேஷ்டி, மேலே கதர் துப்பட்டா, பிறைச்சந்தனத்தின் நடுவே குங்குமப் பொட்டு. அவரது கிண்கிணிக் குரலுடன் நாணப் புன்னகையும் சேர்ந்து என் உள்ளத்தில் அன்பு மின்சாரம் பாய்ச்சின"

சேரன்மாதேவியில் வ.வெ.சு.ஐயரின் குருகுலம் அமைக்கப்பட்டது. அதற்கு தலைவர் வ.வெ.சு.ஐயர். அங்கு சுத்தானந்தர் இலக்கியம், கல்வி விளம்பரம், பத்திரிகை காரியாலயம் நிர்வாகம் ஆகியவற்றைக் கவனித்தார். "பாலபாரதி" இதழ் பொறுப்பு முழுவதும் இவருடையது. வ.வெ.சு.ஐயரின் குருகுல வாழ்க்கை பற்றி இவர் எழுதியதைப் படித்தால்தான் அந்த குருகுலம் எப்படிச் செயல்பட்டது என்பது புரியும். அங்கு ஒருநாள் வாழ்க்கை எப்படி இருந்தது தெரியுமா?

காலை நாலறைக்கு அனைவரும் எழவேண்டும். காலைக்கடன்கள் அனைத்தும் முடியும். பல்துலக்க மாவிலை பறித்து அதில்தான் துலக்க வேண்டும். சிறிது உடற்பயிற்சி. பின்னர் ஆசிரமத்தைக் கூட்டி சுத்தம் செய்தல்; பின்னர் குளிக்க வரிசையில் தாமிரபரணி ஆற்றுக்குச் செல்வர். ஆசிரமம் திரும்பியதும் காலை உணவாக வாழைப்பழம், வேர்க்கடலை, மோர் அல்லது பழைய சோறு. வகுப்புகள் தொடங்கும். பதினோரு மணிக்கு மதிய உணவு. சாப்பிடும்போது யாரும் பேசக்கூடாது. உணவு, சோறு, கூட்டு, மோர், பழம், தேங்காய் இவைகளே. புளி, மிளகாய், வெங்காயம், காபி, டீ இவை அறவே கிடையாது. உணவுக்குப் பின் தட்டுக்களைக் கழுவுதல், இடத்தை சுத்தம் செய்தல் அனைத்தும் மாணவர்களே. பிற்பகல் சந்தைக்குச் சென்று சிலர் வேண்டிய சாமான்களை வாங்குவர். மற்றவர் ராட்டையில் நூல் நூற்பர். பிற்பகல் நான்கு மணிக்கு வகுப்புகள் தொடங்கும். மாலையில் விளையாட்டு. இரவு பஜனை தொடர்ந்து உணவு. ஒன்பது மணிக்கு ஆசிரமம் தூங்கிவிடும்.

இங்கு சுத்தானந்தர் எழுதிய பாரதசக்தி மகாகாவியம் ஐயரால் மேலும் மெருக்கூட்டப்பட்டது. இங்கு தலைவர்களின் விழாக்கள் நடக்கும். திலகர் ஜெயந்தி, காந்தி ஜெயந்தி, நவராத்திரி உத்சவம், உடல்நலம் கெட்டால் இயற்கை வைத்தியம் இப்படி. பாலபாரதி பத்திரிகைக்கு சுத்தானந்தரே முழுப்பொறுப்பெடுத்து வெளியிட்டார். படிப்பு தவிர மாணவர்களை அடிக்கடி வெளியில் சுற்றுலா அழைத்துச் சென்று இயற்கை வளங்களைக் காண்பிப்பார்கள். அப்படி அவர்கள் சென்ற இடங்கள், கல்யாண அருவி, குற்றாலம், நாகர்கோயில், குமரி முனை, பத்மநாபபுரம், திருவனந்தபுரம், கொல்லம், திருச்செந்தூர் இப்படி பல இடங்களுக்கும் சென்று நல்ல அனுபவம் பெற்றனர் மாணவர்கள்.

இவர் அங்கிருந்த காலத்தில்தான் வ.வெ.சு.ஐயர் மீது ஜாதிப்பிரிவினைப் பார்த்து உணவு வழங்குகிறார் என்ற குற்றச்சாட்டு எழுந்தது. இவ்வளவுக்கும் ஐயர் மிகப் பரந்த மனப்பாங்கு உள்ளவர். குறுகிய ஜாதிப்பிரிவுகளில் உட்படாத புரட்சிக்காரர். அவருக்கே இப்படிப்பட்ட குற்றச்சாட்டு எழுந்ததை சிறுபிள்ளைத்தனமாக இருந்தது என்கிறார்

சுத்தானந்தர். பிரயாணங்களில் நாங்கள் அனைவரும் ஒன்றாக கலந்தே சமைத்து உண்டோம் என்கிறார் இவர்.

இவரிடம் ஐயர் மனம்வருந்தி பேசிய மற்றொரு செய்தி எவருடைய மனதையும் நெகிழச்செய்து விடும். அது என்ன? சுத்தானந்தர் எழுதுகிறார்:- "மணி பதினொன்று. நான் கீதை காட்டும் பாதை எழுதிக் கொண்டிருந்தேன். "ஸஞ்சலம் ஹி மனக் கிருஷ்ண' என்ற பகுதியை உரக்கப் படித்தேன். அப்போது ஐயர் வந்தார். ஆம், மனம் ஸஞ்சலமாகத்தான் இருக்கிறது. தைர்யவானையும் காலம் சோதிக்கத்தான் செய்கிறது. மனம் உடைகிறது. சோதனைகளை வென்றுதான் நமது தார்மிக வாழ்வை நிலைநாட்ட வேண்டும் என்றார்.

வ.வெ.சு.ஐயர் அருவியில் விழுந்து இறப்பதற்கு முதல்நாள் ஐயர் தன் மகளுடன் கல்யாண அருவிக்குப் புறப்பட்டார். அப்படி புறப்பட்ட ஐயரை இவர் வர்ணிக்கும் பகுதி இது: "சிங்கம் போன்ற முகம்; நெற்றி நிறைய விபூதி; அழகாகச் சீவி கழுத்தில் படிந்த கேசம்; நீண்டு வளர்ந்த தாடி - இரவும் பகலும் போல் கருப்பும் வெள்ளையும் காட்டுகிறது. வீரக்கனல் விழிகள்; நீர்க்காவி ஏறிய கதர் பஞ்சகச்சம்; மேலே பூப்போட்ட கதர் அங்கவஸ்திரம்; இறுகிப் புடைத்த தோளில், பை; அந்தி அழகெல்லாம் ஐயர் மேல் பொலிகிறது. மஞ்சள் வெயிலில் அவரது வீர வடிவம் தெரிகிறது. அந்தி மல்லிகைக் கொடிபோல் சுபத்திரா தவழ்கிறாள். நமஸ்காரம்.... என்றேன். அந்தோ! அதுதான் அவரது கடைசி சமஸ்காரமானதோ!"

பிறகு, மறுநாள் நடந்தவைகளை அவர் வாக்கால் கேட்டால்தான் அதன் ஆழம் புரியும். அவர் சொல்லுகிறார்:-

"மறுநாள் அனந்தகிருஷ்ணய்யர் ஓடிவந்தார். வாருங்கள் என்று என்னை மாடிக்கு அழைத்துச் சென்றார். அங்கு அவர் விம்மி விம்மி அழுதார். 'சுபத்ரா கால் தவறி அருவியில் விழுந்தாள். அவளை எடுக்க ஐயரும் குதித்தார். இதுகாறும் உடல் கிடைக்கவில்லை' என்றார். என் தலை சுழன்றது. தமிழகம் சுழன்றது. உலகமே சுழன்றது."

"கல்யாண அருவியை நோக்கி ஓடினேன். அப்போதுதான் ஐயரின் உடலை எடுத்துப் போட்டிருக்கிறார்கள். பார்க்கச் சகிக்கவில்லை. தாடி மீசையெல்லாம் முகம் முழுவதும் மீன்கள் கொத்தி விகாரப்படுத்தியிருந்தன. அழகான பெண் சுபத்ரை பிணமாகக் கிடக்கிறாள். மனைவி பாக்கியலட்சுமி அம்மாள் வந்தாள். அந்த சோகமயமான சூழ்நிலையை எப்படிச் சொல்வது. இறுதி கிரியைகள் முடித்து அந்த அம்மாள் தன் மகன் கிருஷ்ணமூர்த்தியுடன் திருச்சிக்குச் சென்றாள்." இப்படி அந்த சோக நிகழ்ச்சியை வர்ணிக்கிறார் யோகி.

மறுநாள் அந்த கல்யாண அருவிக்குப் போனார் சுத்தானந்தர். முதல்நாள் நடந்தவை அவர் மனக்கண்ணில் ஓடுகின்றன. ஐயரின் நினைவு அவர் மனத்தை வாட்டுகிறது. ஒரு பாடல் தோன்றுகிறது.

"சிங்கம் போல் வீறுடையான், சேய்போல் வஞ்சமிலான்
தங்க மணிக்குரலான் சாவிற்கும் அஞ்சாதான்;
முனிபோல் முகமுடையான் முத்துநகையுடையான்
கனிபோல் மொழியுடையான் கண்ணிலினிக் காண்பேனோ?"

இவர் தஞ்சையில் இருந்த போது 1925இல் காஞ்சிபுரம் காங்கிரஸ் மகாநாடு நடந்திருக்கிறது. அதில் **திரு வி.க.** தலைமை வகிக்க வகுப்புவாரி பிரதிநிதித்துவம் வேண்டி பெரியார் தீர்மானம் கொண்டு வந்து அது ஏற்றுக்கொள்ளப் படாமையால் அதிலிருந்தும் காங்கிரசிலிருந்தும் வெளிநடப்பு செய்தார். அந்த மாநாட்டிலும் இவர் கலந்து கொண்டிருக்கிறார். அந்த மகாநாட்டுக்கு முதல்நாள் நடந்த 'விஷயாலோசனைக் கூட்டம்' எப்படி நடந்தது என்பதை இவர் எழுதுகிறார். "விஷயாலோசனைக் கூட்டம் சந்தைக்கூட்டமாக இருந்தது. பேச்சுக்கு பேச்சு வாள்வீச்சாக இருந்தது. ஒருவர் பேசியபின் மற்றவர் பேசினால் நன்றாக இருக்கும், இவர்கள் சளசளவென்று ஒரே நேரத்தில் அனைவரும் கூக்குரல் இட்டனர்" என்கிறார்.

காஞ்சிபுரம் மகாநாட்டையடுத்து வேதாரண்யத்தில் நடந்த காங்கிரஸ் மகாநாட்டிலும் கலந்துகொண்டு இவர் பேசியிருக்கிறார். அதன் பின் சீர்காழியை அடுத்த எருக்கூர் சென்றார். இவ்வூரில்தான் புரட்சிவீரன் **நீலகண்ட பிரம்மச்சாரி** பிறந்தார் என்பதை நினைவு படுத்திக் கொள்ளலாம். இங்குள்ள பாரத சமாஜத்தில் இவர் பேசினார்.

இவருக்கு மத பாகுபாடு இல்லை. இந்து மதத்தாராயினும் மற்ற மதங்களையும் பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரைப் போல, அந்தந்த மதத்தில் ஈடுபாடு கொண்டு அந்த மதத்தாராகவே இருக்கப் பழகியவர். மற்ற மதங்களின் நூல்களைப் பழுதறக் கற்றவர். ஜைன மத்தின் தத்துவங்களை ஆழமாகக் கற்றுத் தேர்ந்தவர் இவர். அது போலவே பைபிள் முழுவதும் இவர் கற்று அறிந்து வைத்திருந்தார்.

இஸ்லாம் தத்துவங்களைக் கற்றுக் கொள்வதற்காக திருக்குர்ரானை முற்றிலுமாக ஓதியவர். அவர் இயற்றியுள்ள "பாரத சக்தி மகா காவியம்" எனும் நூலில் இந்த சர்வமதக் கருத்துக்களை ஆழ்ந்து படித்து நமக்குக் கொடுத்திருக்கிறார். இவர் கிறிஸ்தவ மதம் பற்றிய "கிறிஸ்து சாதனம்" எனும் கட்டுரையொன்றை எழுதி அந்த மதம் சார்ந்த கருத்துக்களைச் சிறப்பாக எடுத்து விவரிக்கிறார். கிருஸ்துவ மத நூலான பைபிளில் 25000 சொற்கள் உண்டு என்றும், இதை வைத்துக் கொண்டு பாதிரிமார்கள் அரிய தொண்டினை இயற்றுவதாகக் கூறுகிறார். பைபிள் உலகிலுள்ள 400

மொழிகலில் இருப்பதாகவும் இவர் ஒரு தகவலைக் கொடுக்கிறார். தான் சென்ற உலக நாடுகள் அனைத்திலும் பைபிள் படிக்கப்படுவது குறித்தும் இவர் குறிப்பிடுகிறார்.

இவர் "புத்தர் கருணை" எனும் சிறிய நூலொன்றை எழுதியிருக்கிறார். புத்தரைப் பற்றி இவர் கூறும் கருத்துக்கள். "புத்தர் அரச போகத்தைத் துறந்தார். அரச மரத்தினடியில் அமர்ந்து இவர் உலகத்தார் துயர் நீங்க ஓர் மார்க்கம் கண்டார். பௌத்தம் அறவழியை போதிக்கிறது. அன்பு, இரக்கம், எளிமை, தன்னலமில்லாதிருத்தல், தானம், சீலம், நல்லொழுக்கம் இவை அமைதிக்கான வழி என்கிறார் சுத்தானந்தர். புத்தமத பிரச்சாரத்திலும் இவர் ஈடுபட்டார். ஜைனர்களின் மகாவீரர் பற்றியும் இவர் விளக்குகிறார்.

பாரதிக்கும் தனக்கும் இருந்த பழக்கம் குறித்து அவரே எழுதியதைப் பார்க்கலாம்.

"பாரதியாரை சிறுவயதில் நான் மதுரையில் பார்த்தேன். அப்போது அவர் வாட்டசாட்டமாக களை பொருந்தியவராக இருந்தார். புதுச்சேரியில் அவரைப் பார்த்தபோது அவர் மெலிந்து போயிருந்தார். நெற்றியில் நாமமும், கூரிய பார்வையும், பாவறா வாயும், தைரிய மீசை தாடியும் பாரதியை விளக்கின. இப்போது எவ்வளவு வேற்றுமை. ஆள் இளைத்திருந்தார். ஆனால் விழிகளில் அதே கனல். வெற்றிலைக் காவியேறி உதட்டில் அதே முத்து நகையைக் கண்டேன். மீசை ஐயமுண்டு பயமில்லை என்று பேசியது. தாடியில்லை."

கடையத்துக்குச் சென்று பாரதியைக் கண்ட காட்சியை இப்படி விளக்குகிறார். "முதலில் அக்கிரகாரத்துக்குச் சென்று பாரதியார் வீடு எது என்று வினவினேன். அடடா! நீர் வைதிகமாயிருக்கிறீர். அவனை ஏன் பார்க்கிறீர், அவன் முழு அனாச்சாரம் என்றார் ஒருவர். 'அது கிறுக்குப் பிடித்து கஞ்சா போட்டு எங்காவது திரியும்' என்றார் இன்னொருவர். 'நாங்கள் யாரும் அவன் வீட்டுக்குப் போவதில்லை, அவன் கழுதையைக் கொஞ்சும் கவி' என்றார் இன்னொருவர்.

நான் அவர்கள் வாயை அடக்கினேன். 'ஐயா! தமிழ்நாடு முழுவதும் கொண்டாடும் கவிக்குயிலை காகமும், கூகையும் வெறுத்தால் பரவாயில்லை, அவர் பெருமையை நான் அறிவேன் என்றேன்.

ஒருவர் மட்டும் கடையம் சத்திரத் திண்ணையிலிருந்து வந்து "அதோ அந்த ஆற்றங்கரை தோப்பில் தாண்டுகால் போடுகிறார்" என்றார்.

ஓடினேன். "விட்டு விடுதலை ஆகிடுவாய் இந்தச் சிட்டுக் குருவியைப் போலே" என்ற பாட்டு என்னை வரவேற்றது. பாரதியார் அந்தப் பாட்டைப் பாடிக்கொண்டு வெகு முறுக்காக ராணுவ நடைபோட்டுக் கொண்டிருந்தார். இடையிடையே மீசையை நகாசு செய்து கொண்டே,

அஸ்தமனச் சூரியனைப் பார்த்தார். பசுஞ்சோலையில் தங்க முலாம் பூசியது போல மஞ்சல் வெயில் படர்ந்தது." இப்படிச் சொல்லிக்கொண்டே போகிறார் சுத்தானந்தர்.

மறுமுறை திருச்செந்தூரிலும் பாரதியாரைச் சந்தித்திருக்கிறார். அங்கு பாரதியார் "முருகா, முருகா" எனும் பாடலைப் பாடியதைக் கேட்டிருக்கிறார். கடைசி முறையாக பாரதியைச் சென்னைக் கடற்கரையில் பார்த்திருக்கிறார். அப்போதுதான் பாரதியார் "பாரத சமுதாயம் வாழ்கவே" எனும் பாடலைப் பாடியதையும் அப்போது வ.வெ.சு.ஐயரும் கூட இருந்ததையும் விவரிக்கிறார்.

வ.உ.சிதம்பரம் பிள்ளையுடன்

தூத்துக்குடி சென்று இவர் வ.உ.சி.யைச் சந்தித்தார். அப்போது காங்கிரசில் இரு பிரிவுகள். ஒன்றுக்கு வரதராஜுலு நாயுடு தலைவர். இவர் அங்கு சென்றதும் மற்றொரு கோஷ்டி இவரை கூட்டங்களில் பேச அழைத்தது. வ.உ.சியுடன் நெருங்கிப் பழகிய காலமும் இதுதான். அவரைப் பற்றி சுத்தானந்தர் கூறுவது:"உரம் பெற்ற வீர உள்ளம், கம்பீரமான கருமேனி, முரசம் போன்ற தமிழ்ப்பேச்சு, பேச்சுக்கேற்றபடி துடிக்கும் மீசை, வக்கீல் உடை, அன்பான மனம், புலமை நிரம்பிய சொல் - எல்லாம் என் மரியாதையை அதிகரிக்கச் செய்தன. 'வீரச்சிதம்பரம் பிள்ளை' என்ற பாட்டைப் பாடினேன்." என்கிறார்.

பாட்டைக் கேட்ட வ.உ.சி. "பாட்டு கம்பீரமாக இருந்தது. பாரதி கேட்டால் மகிழ்வார். ஸ்வயராஜ்யாவில் தங்கள் தலையங்கம் படித்தேன், நடையில் பழைய விறுவிறுப்பும் புதிய மறுமலர்ச்சியும் உள்ளன. ஆனால் எல்லாம் காந்தி மயமாக இருக்கிறது. திலகரும் உமது நண்பர்தானே?" என்றார் பிள்ளைவாள்.

அதற்கு சுத்தானந்தர், "திலகரிடமும் எனக்கு உள்ளன்புதான். அந்த மராட்டிய வீரம் தங்கள் தமிழ் மீசையில் துடிக்கிறதே. வெள்ளையரை விரட்டியடிக்க அவர் வீரம் பேசினார். தாங்கள் வெள்ளையன் வெட்கும்படி கப்பல் விட்டீர்கள். தங்கள் தியாகத்தை சுதந்திர பாரதம் பொன் எழுத்துக்களால் பொறிக்கும்" என்றேன்.

பிள்ளை சொன்னார், "நான் சிறையை விட்டு வெளிவந்தபோது எனக்கு மாலை சூட்டி வரவேற்க ஒரு தமிழன்கூட இல்லை. எண்ணைக்கடை வைத்துப் பிழைத்தேன். வறுமையில் வாடினேன். வாலஸ் துரை எனது சன்னத்தை மீட்டுத்தந்தார். அந்த நன்றிக்கே என் பிள்ளைக்கு வாலேசன் என்று பெயரிட்டேன்.

அதற்கொரு குறள்:

"கொன்றன்ன இன்னா செயினும் அவர் செய்த
ஒன்று நன்றுள்ளக் கெடும்".

இன்று எனக்கு மாதம் முன்னூறு ரூபாய் தந்தால் இப்படியே அரசியல் மேடையில் குதிக்கிறேன். நான் ஒருவன் கிளம்பினால் போதும், நாட்டை உரிமைக்கு அழைத்துச் செல்வேன்" என்றார்.

"தங்கள் உணர்ச்சிதான், பாரதி வாணியாகப் பாடியது. தங்கள் பேச்சு, பாரதி பாட்டு, ஐயர் எழுத்து, சிவாவின் ஆவேசம் - இந்த நான்கும் தமிழுலகைத் தட்டி எழுப்பின. இன்று வகுப்புவாதம்தான் நாட்டைப் பிளக்கிறது" என்றேன்.

அதற்கு **வ.உ.சி. சொன்னார்**, "என் குருநாதர் காலத்தில் வகுப்புவாதமே கிடையாது. இன்று நாடு வகுப்புக் கந்தலாயிருக்கிறது. இந்து, முஸ்லீம், பார்ப்பான், அல்லான், வைதிக ஒத்துழையாமை, ஸ்வயராஜ்யக் கட்சி என்ற பிரிவெல்லாம் தற்கால அரசியல் ஊழலையே காட்டுகின்றன. எனக்கு மட்டும் வாய்ப்பளித்தால், தமிழரை ஒன்று சேர்ப்பேன். நாயக்கரும், நாயுடுவும், ஐயங்காரும், ஐயரும் என்னுடன் கைகோர்த்து நடக்கச் செய்வேன்" என்றார்.

அன்று நடந்த கூட்டத்துக்கு சிதம்பரம் பிள்ளை தலைமை வகித்தார். வரதராஜுலு நாயுடு, எம்.எஸ்.சுப்பிரமணிய ஐயர், குப்புசாமி முதலியார், அண்ணாமலைப் பிள்ளை, சுப்பையர் ஆகியோர் பேசினர். கடைசியில் சுவாமி சுத்தானந்த பாரதியார் பேசுகிறார், பேசத்தான் வேண்டும், பேசும் பாரதியார் என்று அழைத்தார் தமிழ்ச்சிங்கம் வ.உ.சி. காலமும் கடமையும் என்று நான் பேசினேன், இல்லை கர்ஜித்தேன் என்கிறார் சுத்தானந்தர்.

விஜயபாரதம்
தேசிய வார இதழ்

https://vijayabharatham.org/%E0%AE%9A%E0%AF%81%E0%AE%A4%E0%AF%8D%E0%AE%A4%E0%AE%BE%E0%AE%A9%E0%AE%A8%E0%AF%8D%E0%AE%A4-%E0%AE%AA%E0%AE%BE%E0%AE%B0%E0%AE%A4%E0%AE%BF/

சுத்தானந்த பாரதி

May 11, 2022

ஆசிரியர்

கவியோகி, மகரிஷி எனப் போற்றப்பட்டவரும், பன்மொழிப் புலவரும், ஆன்மிகத்திலும் இலக்கியத்திலும் சிறந்து விளங்கியவருமான சுத்தானந்த பாரதி ,சிவகங்கையில் 1987ல் பிறந்தார். தன் தந்தை வேதங்களைக் கற்றார். பின்னர் திண்ணைப் பள்ளி, மன்னர் பள்ளியில் படித்தார். எட்டாம் வயதிலேயே கவிதை எழுதும் ஆற்றலும் ஆன்மிக விழிப்புணர்வும் இவருக்கு ஏற்பட்டது. இமயமலையில் வாழ்ந்துவந்த சித்தர் ஒருவர் இவருக்கு 'சுத்தானந்தம்' என்று பெயரிட்டு தீட்சை வழங்கினார். கல்லூரிப் படிப்பு முடிந்தவுடன் வேதம், உபநிஷத்துகள், பிரம்ம சூத்திரம் ஆகியவற்றைக் கற்று அவற்றைத் தமிழில் மொழிபெயர்த்தார். ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தில் 'பாரத சக்தி' என்னும் காவியத்தைப் பாடத் தொடங்கினார்.

பல மொழிகளைக் கற்றறிந்த இவர், திருக்குறளை ஆங்கிலத்தில் அதே ஈரடிகளில், அதே நடை, சந்தத்தில் மொழிபெயர்த்தார். சிருங்கேரி ஜகத்குரு சங்கராச்சாரியர் இவருக்கு 'கவியோகி,' 'பாரதி' என்றும் பெயர் சூட்டினார். சீரடி சாய்பாபா, ரமண மகரிஷி ஆகியோர் இவருடைய ஆன்மிக உயர்வுக்கு வழிகாட்டினர். திலகர், காந்திஜி, நேதாஜி, உ.வே.சு. ஐயர் ஆகியோருடன் நெருங்கிய நட்புறவு கொண்டிருந்தார். தேசியச் சிந்தனைகளைத் தூண்டும் பல பாடல்களை இயற்றினார். கிராமப் பணி, கதர்ப்பணி, மது ஒழிப்பு, தீண்டாமை ஒழிப்பு, பெண்கள் மறுவாழ்வு ஆகிய சீர்திருத்தப் பணிகளையும் மேற்கொண்டார். அரவிந்தரின் தொடர்பால் இவரது வாழ்வில் புதிய திருப்பம் ஏற்பட்டது.


புதுவை ஆசிரமத்தில் 20 ஆண்டுகள் மவுன விரதம் இருந்தர். சமஸ்கிருதம், ஹிந்தி, தெலுங்கு, ஆங்கிலம், பிரெஞ்சு மொழிகளிலும் நூல்கள் இயற்றியுள்ளார். சிறந்த மொழிபெயர்ப்பாளர். கவிதைகள், உரைநடை, பயணநூல், இலக்கணம், கீர்த்தனைகள், நாடகம், திறனாய்வு, சிறுகதை,

அறிவியல், வாழ்க்கை வரலாறு ஆகிய பல துறைகளில் நூற்றுக்கணக்கான நூல்களை எழுதியுள்ளார்.

சோவியத் யூனியன், அமெரிக்கா, சீனா, ஜப்பான், பிரான்ஸ் உள்ளிட்ட பல நாடுகளுக்கும் சுற்றுப் பயணங்களை மேற்கொண்டு சொற்பொழிவாற்றினார். 'அகவாழ்வு சிறந்திட யோகம்; புறவாழ்வு சிறந்திட அறிவியல் இவை இரண்டும் இணைந்தால், மனித வாழ்வு அமரத்துவம் பெறும்; மண்ணில் விண்ணரசு தோன்றும்' என்பதுதான் இவர் உலகுக்கு அளித்த செய்தி. 1977ல் சிவகங்கையில் 'சுத்தானந்த யோக சமாஜம் என்ற அமைப்பை நிறுவினார். 1979ல் சுத்தானந்த தேசிய வித்யாலயம் உயர்நிலைப் பள்ளியை நிறுவி அங்கேயே ஒரு குடிலையும் அமைத்துக்கொண்டு சமாஜம், பள்ளியின் வளர்ச்சிக்கு வழிகாட்டினார். தன் படைப்புகளுக்கு வந்த பணத்தை சமாஜப் பணிகளுக்கே செலவிட்டார். 1990ல் தனது 93வது வயதில் மகாசமாதி அடைந்தார்.

https://www.hindutamil.in/news/blogs/41981-10.html

சுத்தானந்த பாரதி



ராஜலட்சுமி சிவலிங்கம்

கவியோகி, மகரிஷி எனப் போற்றப்பட்டவரும், பன்மொழிப் புலவரும், ஆன்மிகத்திலும் இலக்கியத்திலும் சிறந்து விளங்கியவருமான சுத்தானந்த பாரதி பிறந்த தினம் இன்று (மே 11). அவரைப் பற்றிய அரிய முத்துக்கள் பத்து:

l சிவகங்கையில் பிறந்தார் (1897). வழக்கறி ஞரான இவரது தந்தை வேதங்களைக் கற்ற வர். இவரது இயற்பெயர் வேங்கட சுப்ரமணி யன். ஐந்து வயதில் ரங்க ஐயங்கார் திண் ணைப் பள்ளியில் படித்தார். பின்னர் மன்னர் பள்ளியில் படித்தார்.

l எட்டாம் வயதிலேயே கவிதை எழுதும் ஆற்றலும் ஆன்மிக விழிப்புணர்வும் இவருக்கு ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. இமய மலையில் வாழ்ந்துவந்த சித்தர் ஒருவர் இவருக்கு 'சுத்தானந்தம்' என்று பெயரிட்டு தீட்சை வழங்கினார்.

l கல்லூரிப் படிப்பு முடிந்தவுடன் வேதம், உபநிஷத்துகள், பிரம்ம சூத்திரம் ஆகியவற்றைக் கற்று அவற்றைத் தமிழிலும் மொழிபெயர்த்தார். ஷேக்ஸ்பியர், மில்டன், பைரன் ஆகியோரின் நூல்களையும் கற்றார். ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தில் 'பாரத சக்தி' என்னும் காவியத்தைப் பாடத் தொடங்கினார்.

l இவர் இயற்றிய நூல்களில் யோகசித்தி, கீர்த்தனாஞ்சலி, மேளராகமாலை ஆகிய கவிதை நூல்கள் மிகவும் பிரசித்தம். பல மொழிகளைக் கற்றறிந்தவர். திருக்குறளை ஆங்கிலத்தில் அதே ஈரடிகளில், அதே நடை, சந்தத்தில் மொழிபெயர்த்தார். சிருங்கேரி ஜகத்குரு சங்கராச்சாரியர் இவருக்கு 'கவியோகி,' 'பாரதி' என்றும் பெயர் சூட்டினார். சீரடி சாய்பாபா, ரமண மகரிஷி ஆகியோர் இவருடைய ஆன்மிக உயர்வுக்கு வழிகாட்டினர்.

l திலகர், காந்திஜி, நேதாஜி, உ.வே.சு. ஐயர் ஆகியோருடன் நெருங்கிய நட்புறவு கொண்டிருந்தார். தேசியச் சிந்தனைகளைத் தூண்டும் பல பாடல்களை இயற்றினார். கிராமப் பணி, கதர்ப்பணி, மது ஒழிப்பு, தீண்டாமை ஒழிப்பு, பெண்கள் மறுவாழ்வு ஆகிய சீர்திருத்தப் பணிகளையும் மேற்கொண்டார். அரவிந்தரின் தொடர்பால் இவரது வாழ்வில் புதிய திருப்பம் ஏற்பட்டது.

l புதுவை ஆசிரமத்தில் 20 ஆண்டுகள் மவுன விரதம் இருந்துவந்தார். சமய ஒற்றுமையைப் போற்றியவர். கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகிய சமய நூல்களைக் கற்று அவை காட்டும் நெறிகளையும் பின்பற்றி வந்தவர். 'ஒரே

கடவுள், ஒரே உலகம், ஒரே ஆன்மநேயர் நாம்' என்பதை உலகுக்கு உணர்த்தியவர்.

l சமஸ்கிருதம், இந்தி, தெலுங்கு, ஆங்கிலம், பிரெஞ்சு மொழிகளிலும் நூல்கள் இயற்றியுள்ளார். சிறந்த மொழிபெயர்ப்பாளர். கவிதைகள், உரைநடை, பயணநூல், இலக்கணம், கீர்த்தனைகள், நாடகம், திறனாய்வு, சிறுகதை, அறிவியல், வாழ்க்கை வரலாறு ஆகிய பல துறைகளிலும் நூற்றுக்கணக்கான நூல்களை எழுதிக் குவித்தார்.

l தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் முதல் ராஜராஜன் விருது இவரது 'பாரத சக்தி' நூலுக்குக் கிடைத்தது. 1947-ல் ஆன்மிகப் பயணங்கள் மேற்கொள்ளத் தொடங்கினார்.


l சோவியத் யூனியன், பிரான்ஸ் உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளுக் கும் சீனா, ஜப்பான் உள்ளிட்ட ஆசிய நாடுகளுக்கும், அமெரிக்க, ஆப்பிரிக்க நாடுகளுக்கும் சுற்றுப் பயணங்களை மேற்கொண்டு சொற்பொழிவுகள் ஆற்றினார். 'அகவாழ்வு சிறந்திட யோகம்; புறவாழ்வு சிறந்திட அறிவியல் இவை இரண்டும் இணைந்தால், மனித வாழ்வு அமரத்துவம் பெறும்; மண்ணில் விண்ணரசு தோன்றும்' என்பதுதான் இவர் உலகுக்கு அளித்த செய்தி. 1977-ல் சிவகங்கையில் 'சுத்தானந்த யோக சமாஜம் என்னும் அமைப்பை இவர் நிறுவினார்.

l 1979-ல் சுத்தானந்த தேசிய வித்யாலயம் உயர்நிலைப் பள்ளியை நிறுவினார். அங்கேயே ஒரு குடிலையும் அமைத்துக்கொண்டு சமாஜம், பள்ளியின் வளர்ச்சிக்கு வழிகாட்டிவந்தார். தன் படைப்புகளுக்கு வந்த அத்தனை தொகையையும் சமாஜப் பணிகளுக்கே செலவிட்டார். 1990-ல் தனது 93-வது வயதில் மகாசமாதி அடைந்தார்.






















காணொளிகள்

01] **Shuddhananda Bharati | கவியோகி சுத்தானந்த பாரதி | புதுவை ராமசாமி | Kuvikam Ilakkiya Vaasal**

https://www.youtube.com/watch?v=UKz2cCPUAhk [51:21]

02] உடலுறுதி - தேக யோகம் - by கவியோகி மஹரிஷி சுத்தானந்த பாரதியார்

https://www.youtube.com/watch?v=nSVHhKpnuVI[4:06:18]

03] ஆன்மிகம் வளர்த்த அருளாளர்கள்
https://www.youtube.com/watch?v=44d6N_t4NMs [21:18]

சுப்பிரமணிய பாரதி, சுத்தானந்த பாரதியார் பெற்ற ஆன்மிக பயணங்களின் குறித்த பாடல்களுக்கும் அவரின் விளக்கங்களும் அவரை பாரதி திருமகன் விளக்கும் உரையரங்க தொகுப்பினை பார்ப்போம்.

தமிழ் இணையக் கல்விக்கழகம்
TAMIL VIRTUAL ACADEMY

https://www.tamilvu.org/ta/courses-diploma-20052010-bkup-p201-p2012-html-p2012042-74209

4.2 மேலை இலக்கிய மொழிபெயர்ப்புகள்

மேலை நாட்டு மொழிகளிலிருந்து தமிழிற்கு மொழிபெயர்க்கப்பட்ட நூல்களை இப்பகுதி சுட்டிக் காட்ட முயற்சி செய்கிறது.

பண்டைக் காலத்திலிருந்தே நாகரிகத்தில் சிறந்துவிளங்கிய கிரேக்க ரோமானிய மொழிகள் ஏராளமான கலைச்செல்வங்களையும், இலக்கியச் செல்வங்களையும் உலக மொழிகளுக்கு வழங்கியுள்ளன. தற்காலத்தில் அம்மொழிகள் வழக்கில் இல்லை என்றாலும், ஆங்கில மொழியில் கலந்துள்ள சொற்களின் வாயிலாக அவற்றைப் பற்றிய உண்மைகளை அறிய முடிகிறது.

4.2.1 கிரேக்க ரோமானிய மொழிகள்

கிரேக்க மொழியில் தோன்றிய பிளேட்டோவின் மாபெரும் உரையாடல்கள் எனும் நூல் தொகுதி உலகப் புகழ் வாய்ந்தது. அதில் இரண்டு குறு உரையாடல்கள் (Phaebo, Apology) சிந்தனையாளர் சாக்ரடீசின் கடைசி நாட்கள் சிலவற்றைச் சித்திரிக்கின்றன. அவற்றை முதன்முதல் தமிழாக்கம் செய்து சோக்ரதர் என்ற பெயரில் தமிழுலகிற்கு சி. இராஜகோபாலாச்சாரியார் (ராஜாஜி) வழங்கியுள்ளார். மேலும் இவர் ரோமாபுரிப் பேரரசன் மார்க்கஸ் அரேலியஸ் எழுதிய நாட்குறிப்பினை, ஆத்ம சிந்தனை என்ற பெயரில் தமிழாக்கம் செய்துள்ளார். தமிழில் மொழிபெயர்ப்புக் கலையின் முன்னோடியான வெ.சாமிநாத சர்மா அவர்கள் பிளேட்டோவின் குடியரசு (Plato's Republic) நூலைச்சிறந்த முறையில் தமிழில் தந்துள்ளார். இதே நூலைப்பேராசிரியர் இராமாநுஜாச்சாரியார் மூலம் பிளேட்டோவின் அரசியல் எனும் நூலாகத் தமிழாக்கம் செய்து சாகித்ய அகாடமி வெளியிட்டுள்ளது.

சாக்ரடீஸ், பிளேட்டோவைத் தொடர்ந்து அரிஸ்ட்டாட்டிலின் கவிதையியலை (Poetics)அ.அ. மணவாளன் மொழிபெயர்த்து அரிஸ்ட்டாட்டிலின் கவிதையியல் என்ற பெயரில் தந்துள்ளார்.

ஹோமரின் இலியத் என்னும் காப்பியம் தமிழில் முழுமையாகக் கீழ்த்திசைச் சுவடிநூல் நிலையத்தால் வெளியிடப்பட்டுள்ளது. இதைப் போன்று ஹோமரின் ஒடிசி என்ற காப்பியமும் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.
ஸோபோக்ளிஸ் எழுதிய கிரேக்க நாடகம் எடிபஸ் வேந்தன், மன்னன் ஈடிபசு என்ற பெயர்களில் தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளது.

4.2.2 எபிரேய மொழி

எபிரேய மொழியில் உள்ள விவிலியம், சென்ற நூற்றாண்டில் முதன் முதலாகத் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது. இதனை யாழ்ப்பாணத்து சைவ சித்தாந்தி ஆறுமுக நாவலருடைய மேற்பார்வையில் இலங்கை கிறித்தவச்சங்கம் தமிழாக்கம் செய்ததாகத் தெரிகிறது. பழைய

ஏற்பாட்டில் உள்ள சால்ம்ஸ் (Psalams) என்னும் துதிப்பாடல்களைத் தேவ சங்கீதம் என்ற பெயராலும், சாலமனின் Song of songs என்னும் பெயராலும், தஞ்சை வேதநாயக சாஸ்திரியார் முதல் பல கிறித்தவ தமிழ்ப்புலவர்கள் தமிழாக்கம் செய்துள்ளனர்.

4.2.3 பாரசீக மொழி

தமிழ்நாட்டு இஸ்லாமியப் புலவர்கள் பலர், பாரசீக மொழியில் உள்ள கதைகள், உரையாடல்கள், சிற்றிலக்கியங்கள் போன்றவற்றைச் சிறப்பாகத் தமிழில் மொழிபெயர்த்துள்ளனர். துத்தி நாமா என்ற கிளிக்கதை, பெரிசிலியன் ஸ்டோரிஸ், மனோரஞ்சிதத் திரட்டு, ஹிகயட் லாடியா போன்ற சிறுகதை நூல்கள் பாரசீகக் கதைகளின் தமிழாக்கமாக விளங்குகின்றன. குலிஸ்தான் என்னும் பாரசீக அறநூல் பூங்காவனம் என்ற பெயரில் தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளது.

உலகப் புகழ் வாய்ந்த உமர்கய்யாமின் பாடல்கள், தமிழில் பன்னிரண்டு அறிஞர்களால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. ஆனாலும் மொழிபெயர்ப்புச் செய்த அறிஞர்களுக்குப் பாரசீக மொழிப்பயிற்சி இல்லை. எனவே அவர்கள் ஆங்கிலத்தில் பிட்ஜெரால்டு (Fitzerald) என்பவரால் மொழிபெயர்க்கப்பட்டுள்ள ஆங்கில நூலைத் தழுவி, தமிழாக்கம் செய்துள்ளனர். இந்தப் பன்னிரண்டு மொழிபெயர்ப்புகளுள் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, சாமி சிதம்பரனார், ச.து.சு.யோகியார் ஆகிய மூவரும் செய்துள்ள மொழிபெயர்ப்புகள் தமிழுக்கு வலிவையும் பொலிவையும் ஊட்டியுள்ளன.

4.2.4 அராபிய மொழி

இஸ்லாமிய சமூகத்தின் புனித மொழி அராபி ஆகும். இம்மொழியில் உள்ள புனித மறையான திருக்குர்ஆனை இதுவரை ஏழு அறிஞர்கள் தமிழில் மொழிபெயர்த்துள்ளனர். அது மட்டும் அல்லாமல் அராபிய மொழியில் உள்ள கதைப்பாடல்கள், காவியங்கள், சூபி தத்துவ விளக்க நூல்கள் முதலியன தமிழில்

தரப்பட்டு உள்ளன. அரபுக் கதைகள் பல சிறந்த முறையில் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு உள்ளன.

மேற்கு ஆசிய நாடுகளில் வளமிக்க மொழிகள் அரபும் பாரசீகமும் ஆகும். அராபிய மொழிகளில் ஏராளமான செய்யுள் இலக்கியங்கள் சிறப்புற்று விளங்குகின்றன. அராபிய ஞானப் புதையல் என்ற பெயரில் குணங்குடி மஸ்தான் சாகிப் தத்துவப் பாடல்களை மொழிபெயர்த்துத் தந்துள்ளார்.

அராபிய மொழிக் கதைகள் உலகப் புகழ்பெற்று விளங்குகின்றன. ஆயிரத்து ஓர் இரவுகள் என்ற அராபியக்கதைத் தொகுப்பை நான்கு தமிழ் அறிஞர்கள் தமிழில் மொழிபெயர்த்துள்ளனர். இந்தத் தொகுப்பு மட்டும் இல்லாமல், அலாவுதீன் அல்லது அற்புதத் தீபம், தாவீது கதை போன்ற அராபியப் புதினங்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு உள்ளன.

இஸ்லாம் சமயக் கவிஞர் இக்பாலுடைய கவிதைகள் இக்பால் கவி அமுதம், இக்பாலின் ஞானோதயம் என்னும் பெயர்களில் தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளன. கலீல் ஜிப்ரான், ஜாலாலுதீன் ரூமி முதலியோரின் படைப்புகளும் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு, தமிழ் மக்கள் படித்து அறியக்கூடியனவாக உள்ளன.

அனைத்துத் துறைகளிலும் இயற்றப்பட்ட அராபிய மொழி நூல்கள் ஸ்பெயின், சிசிலி, சிரியா ஆகிய நாடுகளில் நிகழ்ந்த மொழிபெயர்ப்புப் பிரதியெடுப்புப் பணிகள் வாயிலாக, 12 ஆம் நூற்றாண்டில் இருந்து மறுமலர்ச்சிக் காலத்திற்குள் லத்தீன் மொழியில் வெளிவந்து விட்டன.

மேலை நாடுகளில் அக்காலத்தில் மொழிபெயர்ப்புத் தரமும் அறிவுத் திறனும் குன்றியிருந்த போதிலும் இடைக்காலத்தின் இறுதிப் பகுதியில் மேலைநாடுகள் முழுவதிலும் இந்த இலத்தீன் மொழிபெயர்ப்புகள் அறிவு வேட்கையை அதிகப்படுத்தின. உயிரியல் துறையில் பண்டைக் காலத்தவரின் புகழ் மிகு சாதனைகளை அராபியர் பேணிக்காத்தனர். அதோடு அவர்களே தேடிச் சேர்த்த புதிய விளக்கங்கள் மானுட அறிவை மேலும் வளப்படுத்தின. அனைத்துலகச் சமுதாய நலனுக்காகவும் பணிபுரிந்தன.

கண்நோய் மருத்துவத்தில் நிகழ்ந்த இஸ்லாமிய சாதனைகள் பண்டைய கிரேக்கர்கள் அமைத்த அடித்தளத்தின் மீது எழுந்தவையே ஆகும். கண்நோய் மருத்துவம் பற்றி தாலமி எழுதிய ஆய்வு நூல் தொடக்க நாளிலேயே அராபிய மொழியில் மொழிபெயர்க்கப் பட்டுவிட்டது. அராபிப் பகுதியை அடிப்படையாகக் கொண்ட இலத்தீன் மொழிபெயர்ப்பு ஒன்று 12 ஆம் நூற்றாண்டில் சிசிலியில் உருவாக்கப்பட்டது. கிரேக்க மூலமும் அராபி மொழிபெயர்ப்பும் மட்டும் எஞ்சியுள்ளன.

அராபிய நூலாசிரியர்கள் சிலர் தங்களுடைய நூல்கள் இலத்தீன் மொழியில் பெயர்க்கப்பட்டதால் இலத்தீன் வடிவமாக்கப்பட்ட பெயர்களைத் தாங்கியவர்களாகப் புகழ் பெற்றார்கள்.

4.2.5 பிரெஞ்சு மொழி

ஐரோப்பிய மொழிகளில் பிரெஞ்சு மொழியும் இத்தாலி மொழியும் இனிமை வாய்ந்தவை ஆகும். இவற்றின் இலக்கிய வளம் உலகப் புகழ் வாய்ந்தது. பிரெஞ்சு மொழியின் கவிதைகள் பெருமளவில் தமிழில் மொழிபெயர்க்கப்படவில்லை. பிரான்ஸின் தேசிய கீதத்தைச் சுப்பிரமணிய பாரதியார் தமிழில் மொழிபெயர்த்துத் தந்துள்ளார். அது புதுவை மக்களால் பெரிதும் போற்றப்பட்ட நாட்டுப் பாடலாகும். பிரெஞ்சு மொழியின் சிறப்பு வாய்ந்த புதின ஆசிரியர்களான அலெக்சாண்டர் டூமாஸ், எமிலி ஜோலா, மாப்பசான் போன்ற படைப்பாளிகளின் புதினங்கள் தமிழ் மக்களுக்கு நன்கு அறிமுகமானவை யாகும்.

ஏழை படும் பாடு என்ற பெயரால் சுத்தானந்தபாரதியாரும், அம்பலவாணன் அல்லது நாவாய்க் கைதிஎன்ற பெயரில் பி.எஸ். சுப்பிரமணியனும், விக்டர் யூகோவின் லெஸ் மிசரபிள் என்ற பிரெஞ்சு நாவலைத் தமிழில் தந்துள்ளனர். அலெக்சாண்டர் டூமாசின் லீகாம்டே மாண்டி கிறிஸ்டோ என்ற நாவல், மாண்டி கிறிஸ்டோ பெருமகன் எனவும், அமரசிம்மன் எனவும் தமிழில் மொழிபெயர்ப்பாகியுள்ளன.

அலெக்சாண்டர் டூமாசின் திரி மஸ்கடியர்ஸ் என்ற நாவலை, அன்னியின் காதல் எனவும், மூன்று வீரர்கள் எனவும் மூன்று

போராளிகள் எனவும் தமிழ்ப்படுத்தியுள்ளனர். விக்டர் யூகோவின், லோம்கிரி எனும் புதினத்தைச் சுத்தானந்த பாரதியார் இளிச்சவாயன் எனும் பெயரில் மொழிபெயர்த்துள்ளார். இவருடைய Toilers of the sea கதையைக் கடல் மறவர் எனவும் கடல் வேட்டை எனவும் மொழிபெயர்த்துள்ளனர்.

வான்வெளிப் பயணத்தைப் பற்றி ஜூல்ஸ் வோர்ன் என்பவர் எழுதிய கற்பனைக் கதைகளை ஆகாசப் பிரயாணம் எனவும் 80 நாளில் உலகம், வானவெளியில் ஐந்து வாரங்கள் எனவும் பலவாறாக மொழிபெயர்த்துள்ளனர்.

எமிலி ஜோலாவின் ஜெர்மினல் எனும் புதினத்தைச் சுரங்கம், தப்பிப் பிறந்தவள் என்ற பெயர்களில் தமிழில் தந்துள்ளனர். அவரது நாநா என்ற புதினத்தை, கசங்கிய மலர் எனவும் தாசியின் மகள் எனவும் பல்வேறு பெயர்களில் தமிழ்ப் புதினங்களாகப் பெயர்த்துள்ளனர். மாப்பசானுடைய கதையும் கருத்தும், காதல் சக்கரம், வாழத் தெரியாதவன் போன்றனவும் புதினங்களாகத் தமிழில் வெளிவந்துள்ளன.

அனதோல் பிரான்ஸ் என்பவரின் ராஜிவாணி என்னும் புதினத்தை, சாது சவானி என்று தமிழாக்கியுள்ளனர். இவை தவிர வேறு பல புதினங்களும் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

நாடகங்கள்

ஐரோப்பிய மொழி நாடகங்களில் பிரெஞ்சு மொழி நாடகங்கள் நடப்பியல் பண்பு வாய்ந்தனவாகப் போற்றப்படுகின்றன. பிரெஞ்சு மொழியை வளப்படுத்திய நாடக ஆசிரியர்களுள் மோலியர் முதன்மையானவர். அவரது நாடகங்கள் பல தமிழில் மொழிபெயர்ப்புகளாகவும் தழுவல்களாகவும் வெளியிடப்பட்டுள்ளன. தி நேவரி ஆப் ஸ்கால்பின் என்ற மோலியருடைய நாடகத்தைப் பம்மல் சம்பந்த முதலியார் காளப்பன் கள்ளத்தனம் என்ற பெயரில் தழுவலாக அமைத்துள்ளார்.

இதே நாடகத்தை பி. ஸ்ரீ .ஆச்சார்யா என்பவர், குப்பன் பித்தலாட்டங்கள் எனத் தமிழ்ப்படுத்தியுள்ளார். மோலியரின் சிறப்பு மிக்க நாடகங்கள் இரண்டனை கே.எஸ். வெங்கட்ராமன்

என்பவர் இரு நாடகங்கள் என்ற படைப்பாக வெளியிட்டுள்ளார். இரசின் என்னும் நாடக ஆசிரியரின் பிரித்தானிக் குயில் எனும் நாடகத்தை வீழ்ச்சி என்ற பெயரில் ச.கிருஷ்ணராஜா தமிழாக்கம் செய்துள்ளார்.

கட்டுரைகள்

சிந்தனை வளமும் ஆழமும் வெளிப்படும் வகையில் அமைந்தவை பிரெஞ்சு மொழிக் கட்டுரைகள். பல்வேறு துறைகளின் சிந்தனைக் கருவூலமாக விளங்குகின்ற ரூசோவின் சமுதாய ஒப்பந்தம் (The Social contract theory) என்ற நூல் இதற்கு ஒரு சான்றாகும். இந்நூல் சமுதாய ஒப்பந்தம் என்ற பெயராலும் சனநாயகத் தத்துவத்தின் தோற்றமும் வளர்ச்சியும் என்ற பெயராலும், சமூக ஒப்பந்த நெறி என்ற பெயராலும் தமிழில் தரப்பட்டுள்ளது. இவற்றோடு டி.என்.இராமச்சந்திரன், வால்டேர் முதல் மாப்பசான் வரை என்ற தொகுப்பு நூலில் பிரெஞ்சு அறிஞர்கள் பலருடைய சிறப்பான கட்டுரைகளை மொழிபெயர்த்துத் தந்துள்ளார்.

மகாத்மா காந்தி, விவேகானந்தர் போன்ற இந்தியச் சிந்தனையாளர்களைப் பற்றி ரொமைன்ட் ரோலண்ட் என்ற பிரெஞ்சு அறிஞர், பிரெஞ்சு மொழியில் எழுதியுள்ள நூல்களையும் தமிழில் மொழிபெயர்த்துள்ளனர்.

பிரெஞ்சு மொழியில் உள்ள வரலாற்று இலக்கியத் திறனாய்வுக் கட்டுரைகளையும், சிறுகதைகள் சிலவற்றையும் வாணிதாசன் தமிழாக்கம் செய்துள்ளார்.

திராவிட இயக்கத் தலைவர்களில் ஒருவரான சி.பி.சிற்றரசு எமிலி ஜோலா வாழ்க்கை வரலாற்று நூலினை ஆங்கில வழியாக மொழிபெயர்த்து இருபாகங்களாக 1952 ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளார்.

எமிலி ஜோலா, அரசின் அடக்குமுறைக்கு எதிராகப் போராடித் தண்டனை பெற்றவர். ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவாக அதிகாரத்தினை எதிர்த்துக் குரல் கொடுத்தவர்; சமூகப் போராளி. இவரைப் பற்றி உணர்ச்சி மயமாக சி.என்.அண்ணாதுரை 1959 இல் ஏழை பங்காளன் என்ற தலைப்பில் எழுதியுள்ளார்.

பிரெஞ்சு சிந்தனையாளர்கள் பெரிய அளவில் தமிழில் தாக்கம் ஏற்படுத்தியுள்ளனர். புரட்சி செய்த பேனா வீரர் என்ற பெயரில் ப.கோதண்டராமன் 1946 இல் வெளியிட்டுள்ளார். அதில், பிரெஞ்சுப் புரட்சி என்ற தலைப்பில் வால்டேர், மொந்தெஸ்கியோ, திதெரோ, ஒல்பாக், மப்லி, ரெய்லால், மெர்சியே, ரூசோ ஆகியோரின் புரட்சிகரமான செயற்பாடுகளும் சிந்தனைகளும் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. அஞ்சா நெஞ்சன் வால்டேர் என்ற நூலினை மா.இளஞ்செழியன் 1958 ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளார்.

இது தவிர பிரேமா பிரசுரம் சிந்தனையாளர் வரிசையில், பிரெஞ்சு சிந்தனையாளரின் வாழ்க்கை வரலாறு, சிந்தனைகள் என்ற இரு பெரும் பிரிவுகளுடன் எளிய தமிழில் நூல்களை வெளியிட்டுள்ளது.

கி.பி. 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து இலக்கியப்படைப்புகள், பிறநாட்டு மொழிகளிலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு வருகின்றன. ஆயினும் ஆங்கிலம், பிரெஞ்சு, ரஷ்யன் ஆகிய மொழிகளில் வெளியான இலக்கியப் படைப்புகள் தமிழ் மொழிபெயர்ப்பில் செல்வாக்குச்செலுத்துகின்றன. பண்பாட்டு நிலையில் பிரெஞ்சு, ரஷ்ய இலக்கியப் படைப்புகள் தமிழர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன. அவ்விருமொழி இலக்கியங்களும் தமிழ் மனோநிலைக்கு நெருங்கிய நிலையில் இருப்பதால் அவை சித்தரிக்கும் உலகு வாசகரிடையே அழுத்தமான பாதிப்பை ஏற்படுத்துவதாய் உள்ளது.

பிரெஞ்சு மொழியிலிருந்து பல தமிழில் மொழிபெயர்க்கப்பட்டன. பெரும்பாலுமான பிரெஞ்சு இலக்கியப் படைப்புகள் ஆங்கிலம் வழியாகவே தமிழாக்கப் பட்டுள்ளன. வெ.ஸ்ரீராம், மதன கல்யாணி மொழிபெயர்ப்பில் வெளியான நூல்கள் மட்டும் பிரெஞ்சு மொழி மூலத்திலிருந்தே மொழிபெயர்க்கப்பட்டன. அலெக்சாண்டர் டூமாஸ் எழுதிய மாண்டி கிறிஸ்டோ நாவல் அமர சிம்ஹன் என்ற பெயரில் என்.சி.கோபால கிருஷ்ணப்பிள்ளை மொழிபெயர்ப்பில் 1914 ஆம் ஆண்டில் வெளியாகியுள்ளது. இதுவே பிரெஞ்சில் இருந்து தமிழில்

மொழி பெயர்க்கப்பட்ட முதல் இலக்கியப் படைப்பாகும். ஆல்பர்ட் காம்யூவின் ல ட்ரன்ஞர் என்ற பிரெஞ்சு நாவல் அந்நியன் என்ற பெயரில் வெ.ஸ்ரீராமின் தமிழ் மொழிபெயர்ப்பில் 1980 ஆம் ஆண்டு வெளியானது.

எமிலி ஜோலா, அலெக்ஸாண்டர் டூமாஸ், மாப்பசான், பால்சாக், மோலியர், விக்டர் ஹியூகோ முதலியோரின் படைப்புகள் பெருமளவில் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. பிரெஞ்சு நாட்டுச் சிறுகதை மன்னன் மாப்பசானின் நூற்றுக்கணக்கான சிறுகதைகளைப் புதுமைப்பித்தன் மொழிபெயர்ப்பாகவும், தழுவலாகவும் அமைத்துள்ளது தமிழில் குறிப்பிடத்தக்க முயற்சியாகும். பால்சாக்கின் சிறுகதைகள் ஏராளமாகத் தமிழில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளன. தமிழில் பால்சாக் கதைகள் என்ற தொகுப்பு சிறப்புடையதாகப் போற்றப்படுகிறது. இவ்வாறே மாப்பசான் கதைகள் பல தொகுதிகளாகத் தமிழில் வெளியிடப்பட்டுள்ளன. சில படைப்பாளிகளின் குறிப்பிடத்தக்க படைப்புகள் வெவ்வேறு காலகட்டங்களில் பல்வேறு மொழிபெயர்ப்பாளர்களால் மொழிபெயர்க்கப் பட்டுள்ளன.

சிறுபத்திரிகைச் சூழலில் பிரெஞ்சு இலக்கியப் படைப்புகள் எழுபதுகள் தொடங்கி, தொடர்ந்து தமிழாக்கம் பெற்று வெளியிடப்படுகின்றன. இன்று வரை சிறுபத்திரிகைகளில் பிரெஞ்சு இலக்கியப் படைப்புகள் நேரடியாகவோ ஆங்கிலம் வழியாகவோ தமிழில் வெளியிடப்பட்டு வருகின்றன.



(😊)(😊) சுத்தானந்தா பாரதியார் (😊)(😊)